# சுதந்திரன்
SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2004, ஐப்பசி 19 உ (4-11-73) ஞாயிறு ஷவ்வால்:ஆகிர் 8 —புத்தகம் 27 இதழ் 10


**அடிமை!**

ஏ...பச்சைக் கிளியே
நீ—
உன் எஜமானர்கள்
சொல்வதையே சொல்லி
அவர்கள் போடும்
எச்சத்தை உண்டு!
ஏன் இப்படிக் கூண்டில்
அடைபட்டுக் கிடக்கிறுய்.
உனக்கு—
எங்காவது சென்று
கதவிடுக்குகளில் நெரிந்து
தந்திக் கம்பிகளில் தொங்கி
பாழுங் கிணற்றுள் வீழ்ந்து
தார் றோட்டில் நசுங்கி
இறந்து போகத்
தெரியவில்லையா?

—அளவை க. ஆதவன்

# தமிழ் சஞ்சிகைகள் இறக்குமதி மீது மேலும் வெட்டு விழும்!

சிங்களக் குழந்தைகளுக்கு தேவையான சிங்களப் புத்தகங்கள் தொடர்ந்து ரஷியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படலாம் என்று புத்தகங்கள் சஞ்சிகைகள் இறக்குமதி பற்றி ஆராய்வதற்கு டாக்டர் பி. என். எஸ். கருணாதிலகா தலைமையில் நியமிக்கப்பட்ட குழு தனது அறிக்கையில் சிபார்சு செய்துள்ளது.

அதே வேளையில் இந்த அறிக்கை பற்றி கருத்துத் தெரிவித்த கல்வியமைச்சின் செயலாளர் டாக்டர் பிரேமதாச உடகம, தென் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் தமிழ்ப் புத்தகங்கள், சஞ்சிகைகளில், தொண்ணூறு சதவீதமானவை கல்வித்தரம் அற்றவையென்றும், அதனுல் இவற்றின் இறக்குமதி மீது மேலும் கடுமையான கட்டுப்பாடு விதிக்கப்பட வேண்டுமென்றும் கூறியுள்ளார்.

தென்னிந்தியாவை விட, தென்னிந்திய சஞ்சிகைகள் சில இலங்கையிலேயே அதிகம் விற்பனையாகின்றன என்றும் அவர் கூறியிருக்கிறுர்.

உள்ளூர் தமிழ் எழுத்தாளர்கள், தென்னிந்திய புத்தகங்கள் சஞ்சிகைகள் இறக்குமதி மீது கடுமையான கட்டுப்பாடு விதிக்க வேண்டும் என்று கோரியிருப்பதாகவும் இவர்களை ஆதரித்து ஊக்கப்படுத்த கல்வித்திணைக்களம் தயாராக உள்ளதென்றும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறுர்.

உள்ளூர் சிங்கள சிறுவர் இலக்கியத்தை ஊக்கப்படுத்துவதற்காக சோவியத்திலிருந்து வரும் சிங்களப் புத்தகங்களுக்கும் கட்டுப்பாடு விதிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்

## உணவு உற்பத்தி இயக்கத்திலும் சிங்களத் திணிப்பு நடத்துகிறீர்களே!

### காணியமைச்சருக்கு இரத்தினம் எதிர்ப்பு!

காணியமைச்சர் ஹெக்டர் கொப்பேகடுவாவுக்கு பண்டிதர் கா. பொ. இரத்தினம் பா. உ. பின்வரும் கடிதத்தை 30.10.73 ல் எழுதியுள்ளார்:-

உணவு உற்பத்தியில் அரசியலுக்கு இடமில்லையென்று எனக்கு நீங்கள் நேரில் கூறினீர்கள். உங்கள் அமைச்சும், உங்கள் பொறுப்பிலுள்ள திணைக்களங்களும் தமிழைப் புறக்கணித்து வருகின்றன. இதை நான் சுட்டிக்காட்டியும் நீங்கள் கவனிப்பதாகத் தெரியவில்லை.

கமத்தொழில் சேவைத் திணைக்களத்தில் 69 — ஆம் ஆண்டு நிருவாக அறிக்கை காணி சீர்திருத்த ஆணைக்குழு எனக்கு அனுப்பிய 6/1/79/15 ஆம் எண்ணையும் 8.10.73 ஆம் திகதியையுமுடைய கடிதம் அக்குழுவுக்கு உரிமையளிக்கப்பட்ட காணிகளின் பட்டியல்கள் 1—4 பகுதிகள் முதலியனவும் தமிழில் வெளியிடப்படவில்லை. இவற்றில் ஆங்கிலத்துக்குக் கொடுக்கப்பட்ட இடம்தானும் தமிழுக்குக் கொடுக்கப்படவில்லை. இதனுடன் இணைக்கப்பட்டிருக்கும் விதைப் பொறி உறைகளிற்றனும் தமிழ் இடம்பெறவில்லை.



தனிச் சிங்களத்தில் மட்டுமே விபரங்கள் அச்சிடப்பட்டுள்ள. உணவு உற்பத்தி இயக்கம் சிங்களத்திணிப்புக்கும் உங்கள் அரசியிற் கட்சியின் செல்வாக்கை வளர்ப்பதற்கும் தானே பயன்படுத்தப்படுகிறது.

## தமிழ் ஈழத்தின் பொருளாதாரத்துக்கு கூட்டணி உருவாக்கும் திட்டம்!

தமிழர் கூட்டணி தமிழ் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும், தமிழ் ஈழத்தின் தொழில் வளத்தைப்பெருக்கவும் விரிவான பொருளாதாரத் திட்டம் ஒன்றைத் தீட்டி வருவதாகத்தெரிகிறது. இந்தப் பொருளாதாரத் திட்டத்தை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதில் தமிழர் கூட்டணிப் பிரமுகர்களில் ஒருவரான திரு. அ. குமரகுரு கவனமெடுத்து வருகிறுர்.

இது சம்பந்தமாக அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழர் கூட்டணி நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் திரு. குமரகுரு அவர்களால் முன்மொழியப்பட்ட கீழ்க்கண்ட தீர்மானம் ஒருமனதாக ஏற்கப்பட்டது:-

'பொருளாதாரக் கண்ணோட்டமில்லாத எந்தஅரசியல் இயக்கமும் பூரண வெற்றி பெறுவதென்பது இயலாத காரியம். தமிழ்ப் பகுதிகளிலுள்ள பல்லாயிரம் இளைஞர்கள் தங்கள் எதிர்கால வாழ்வைப்பற்றிக் கவலைகொண்டிருக்கிறுர்கள். அரசாங்கத்திடமிருந்து வேலை வாய்ப்பை எதிர்பார்த்துக் கிடைக்காத நிலையில் விரக்தியடைந்து வாழும் இந்த இளைஞர்களின் பொருளாதார எதிர்காலத்தைப் பற்றித் தமிழர் கூட்டணி சிந்தித்துச்செயலாற்ற வேண்டும். இதற்கான ஒரு விரிவான பொருளாதாரத் திட்டத்தைத் தமிழர் கூட்டணி உருவாக்கி அதற்கான ஆக்கவேலைகளை மேற்கொள்ளவேண்டும். உணவு நெருக்கடி ஏற்பட்டிருக்கும் இந்த வேளையில் இளைஞர்களை உணவு உற்பத்தியில் பெருமளவில் பயன்படுத்துவது இளைஞர்களுக்கும் நமது நாட்டுக்கும் நல்லது. அரசாங்கத்திடமிருந்து எவ்வித உதவியையும் எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லாத வகையில் ஒரு பெரும் திட்டம் திட்டப்படவேண்டும்.'

'நடவடிக்கை குழு கொள்கையளவில் இதை ஏற்றுக்கொண்டால் இது பற்றி ஆராயக்கூடிய ஒரு குழுவுக்கு என்று மனத்திலுள்ள திட்டத்தையும் இன்னும் பல நண்பர்கள் ஆராய்ந்து கொண்டிருக்கும் திட்டங்களையும் நான் சமர்ப்பிப்பேன்.'

## மலையகத்தில் சத்தியாக்கிரகம்!

### இ. தொ. கழகமும் பங்குபற்றும்!

எதிர்க்கட்சியினர் நடாத்தும் இரண்டாவது சத்தியாக்கிரகம் 14-11-73 ஞாயிற்றுக்கிழமை நுவரெலியாவில் நடைபெறும்.

இந்த சத்தியாக்கிரகத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும், இலங்கைத் தொழிலாளர் கழகமும்பங்குபற்றுகின்றன. ஜனநாயக தொழிலாளர் காங்கிரசும் தன்னுடைய உறுப்பினர்களுக்கு அதில் பங்குபற்ற அனுமதியளித்துள்ளது.

பட்டினியால் வாடும் மலையகத் தொழிலாளர்கள் இச்சத்தியாக்கிரகத்தில் பல்லாயிரக்கணக்கில்திரண்டு ஆட்சியாளருக்கு தமது எதிர்ப்பை காட்டுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## இந்தியத் தூதுவர் முயற்சி வெற்றி!

'பிரஜாவுரிமை அந்தஸ்து பெருத காரணத்தினுல் இந்தியவம்சாவளியினரை அவர்கள் இப்போதுள்ள வேலைகளிலிருந்து நீக்க முடியாது. அப்படி நீக்குவது சிறிமா—சாத்திரி ஒப்பந்தத்திற்கு முரணனது:

—மேற்கண்ட உண்மையை இலங்கையிலுள்ள இந்தியத் தூதர் குடியேற்ற வெளியேற்றக் கட்டுப்பாட்டதிகாரிக்கு அண்மையில்சுட்டிக் காட்டியதைத் தொடர்ந்து, பின்வரும் மூன்று பிரிவுக்குள் அடங்குபவர்கள் யாராவது

(5-ம் பக்கம் பார்க்க)

வடமுனைக் குடியேற்றத் திட்டத்திலிருந்து!

## தமிழ்க் குடும்பங்களை வெளியேற்ற பௌத்த பிக்கு தலைமையில் முயற்சி!

### பிரதமருக்கு தேவநாயகம் அறிவிப்பு!

புனைப் பகுதியில் குடியேற்றம் தடுக்கப்பட்ட பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதியில் பௌத்த பிக்கு ஒருவர் தலைமையில் சட்டத்தை மீறி குடியேறியுள்ள சிங்களவர்கள், வடமுனைக் குடியேற்றத் திட்டத்தில் சட்டபூர்வமாக குடியேறியுள்ள தமிழர்களை துரத்தப் போவதாக பயமுறுத்தி வருவதாக கூறப்படுவதால் புனைப் பகுதியில் பெரும் பரபரப்பும் குழுறலும் ஏற்பட்டுள்ளது.

இந்த உண்மையைச் சுட்டிக்காட்டி உடன் நடவடிக்கையெடுக்கும்படி கல்குடா பா. உ. திரு. தேவநாயகம் பிரதமரிடம் தந்தி மூலம் கேட்டிருக்கிறுர்.

வடமுனைக் குடியேற்றத் திட்டத்தில் இருபது தமிழ்க் குடும்பங்களும் எட்டு சிங்களக் குடும்பங்களும் அரசாங்கத்தால் குடியமர்த்தப்பட்டுள்ளன. இவர்களை வெளியேற்றவே இப்போது சதி முயற்சி நடக்கிறதாம்.

(4-ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராஞ்சிதமலர் வெற்றிவேலு
உசன்,
மிருசுவில்.

கே: யாழ் நகரில் நடைபெற இருக்கும் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் இந்நாட்டின் அரசவையில் தமிழ் மொழிக்கு உரிய இடம் அளிக்க மறுக்கும் அமைச்சரவை அங்கத்தவர்களும் தமிழ் மொழியின் சிறப்புப்பற்றி பேசுவார்களா?

ப: அரசியல் வாதிகளுக்கு தமிழாராய்ச்சி மேடையில் இடம் கிடைக்கப்போவதில்லை!

ஃ

சி. றெஜினோல்ட்
சென். மேரிஸ்ரோட்
விடத்தல் தீவு

கே: பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆட்சிப்பீடம் ஏறியகாலத்தில் இருந்து இற்றைவரை நடந்த ஆட்சியைப்பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?

ப: இந்த ஆட்சியை விட கடும்புலி வாழும் காடு நன்றென நினைக்கிறேன்!

நா. நித்தியலட்சுமி
புளுமன்டல்மாடி
கொழும்பு-13

கே: அம்மாவின் (சிறீமா) ஆட்சியில் ஈழத்தமிழருக்கு தந்தை செல்வா தலைமையில் தனி ஆட்சி கிடைக்குமா?

ப: அம்மாவின் ஆட்சியில் எப்படி தனி ஆட்சி கிடைக்கும்? தனி ஆட்சி கிடைத்தால் அங்கு அம்மாவின் ஆட்சி இருக்காதே!

கே: தற்போது உள்ள அமைச்சர்களில் வெளிநாடுகளுக்கு சுற்றுலா செல்லாதவர்கள் எவராவது இருக்கிறார்களா?

ப: குமாரசூரியர்! இவர் சுற்றுலா செல்லவிருப்பமின்றி இருந்தாரா அல்லது வாய்ப்பு கிடைக்காமல்இருந்தாரா என்பது எனக்குத் தெரியாது!

ஃ

அ. க. பகீரதன்,
'அருள் இல்லம்'
அளவெட்டி.

கே: பாரத விடுதலைப் போருக்கு பாரதி கிடைத்ததுபோல எங்கள் விடுதலைப் போருக்கு கிடைத்திருக்கும் காசி ஆனந்தனை விசாரணை ஏதுமின்றி சிறை வைத்திருப்பதுதானு அம்மாவின் ஜனநாயகத்தின் அழகு?

ப: ஜனநாயகம் இந்த நாட்டில் நடப்பதாக யார் உங்களுக்கு சொன்னது? சர்வாதிகார சிங்கள நாயகம் அல்லவா நடைபெறுகிறது?

கே: அம்மா தேர்தலின் போது இரண்டு கொத்து அரிசி தருவோம் விலைவாசியைக் குறைப்போம் எனப் பலவாக்குறுதியளித்தாரே — அந்த வாக்குறுதிகள் இப்போ என்னுச்சு?

ப: ஹொரகொல்லையிலுள்ள பண்டாரநாயகாவின் சமாதிக்குள் அவற்றையும் போட்டுப் புதைச்சாச்சு!

ஃ

நவரத்தினம்—சகுந்தலா
'சிவபதி'
இளவாலை வடக்கு
இளவாலை

கே: எமது தமிழர்களின் புதிய தலைவர் அமிர்தலிங்கத்தைப்பற்றிச் சில வரிகள்—?

ப: சில வரிகள் ஏன்? ஒரே வரியில் கூறிவிடலாமே! அமெரிக்காவுக்கு ஓர் ஆபிரகாம் லிங்கன் — நம் தமிழ் ஈழத்துக்கு ஓர் அமிர்தலிங்கன்!

கே: முதல்வர் கருணாநிதியின் மகன் மு. க. முத்துவின் முகவரியென்ன?

ப: மு. க. முத்து, கோபாலபுரம், சென்னை — என்று எழுதுங்கள்!

ஃ

எஸ். இராமச்சந்திரன்.
கொழும்பு-6

கே: தமிழரசுக்கட்சி சமஷ்டிக்கொள்கையை கைவிட்டு விட்டதென்று கூறியிருக்கிறாரே திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம்?

ப: தமிழரசுக்கட்சி சமஷ்டிக்கொள்கையை கைவிட்டு ஒற்றையாட்சிக் கொள்கைக்கு வந்துவிடவில்லை; சமஷ்டியிலிருந்து ஒரு படி முன்னேறி இப்போது 'தன்னாட்சித் தமிழ் ஈழம்' கோருகிறது. ஆகவே பொன்னம்பலம் கூறுவது சரிதான்!

கே: சுயநிர்ணயக்கோரிக்கையை தமிழ் காங்கிரசே ஆரம்பத்தில் கோரியதென்று கூறியிருக்கிறாரே திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம்!

ஃ

ப: ஆம், 1947ம் ஆண்டு, ஒற்றையாட்சியை தமிழ் மக்கள் நிராகரித்து விட்டார்கள் என்றும் அவர்கள் தமக்குச் சுயநிர்ணய உரிமை கோருகிறார்கள் என்றும் பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டு மந்திரிக்கு தந்தி அடித்தவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் மீண்டும் அந்த பழைய நிலைக்குத் திரும்பி சுயநிர்ணய அடிப்படையில் சுயாட்சித் தமிழ் ஈழத்தை நிறுவ திரு. பொன்னம்பலம் தமது ஆற்றலைச் செல விடுவாரானுல் நாம் எல்லோருமே மகிழ்ச்சியடையலாம்!

ஃ

வெ. செல்லையா,
மல்லிகைத் தீவு
மல்வத்தை.

கே: எங்கள் பகுதியில் வாழும் தமிழ் இளைஞர்கள் சிலரின் வீட்டில் திடீரென இரகசியப்பொலிசார் உட்புகுந்து சோதனையிட்டு விட்டு தேவையற்ற கேள்விகளை வினவுகிறார்கள். நீர் எந்தக்கட்சியை சேர்ந்தவர் என்றெல்லாம் கேட்டுவிட்டு, வீட்டிலுள்ள கடித உறைகளையும் படங்களையும் உன்னிப்பாக கவனித்துவிட்டுப் போகிறார்கள்? நாங்கள் என்ன குற்றம் செய்தோம்? எங்களை எதற்காக விசாரணை செய்யவேண்டும்?

ப: தமிழுணர்ச்சிமிக்க இளைஞர்கள் யாராக இருந்தாலும் அவர்களை இரகசிய பொலிசார் விட்டுவைப்பதில்லை—ஒரு குற்றமும் செய்யாத எத்தனையோ தமிழ் இளைஞர்களை இன்று தடுப்புக்காவலில் வைத்திருக்கிறார்கள். வெருட்டினுல், அடித்தால், உதைத்தால், விடுதலை உணர்வு அடங்கி விடுமென்று தப்புக் கணக்குப்போடுகிறது ஆட்சி. கலங்காதீர்கள். உங்களுக்கு நேர்ந்த கொடுமையை வி. தர்மலிங்கம், பா. உ. கந்தரோடை, சுன்னுகம் எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள். தேசிய பேரவையில் அவர் அதை எடுத்துரைப்பார்.

ப: பாலசிங்கம்,
மீசாலை வடக்கு.

கே: தமிழர் கூட்டணிக் கூட்டங்களில் இதுவரையும் ஜீ. ஜீ. பொன்னம்பலம் கலந்துகொள்ளாததேன்?

ப: கலந்துகொள்ளாததேன் என்பதற்கு விடையளிக்க எனக்கு அருகதையில்லை. ஆனுல் அவர் கூட்டணி எடுத்த நடவடிக்கைகளை ஏற்றுக் கொண்டிருக்கிறார்!

ஃ

எம். டி. சவாஹிர்
வெள்ளவத்தை.

கே: பதவியில் இருக்கும் போது நீதி வழுவாமல் நடந்த அரசியல் வாதிகள் யாராவது இருக்கிறார்களா?

ப: பேரறிஞர் அண்ணு அவர்களைச்சொல்லலாம்!

கே: தோழர் லெனினைச் சிலர் நல்லவர் என்கிறார்கள்—சிலர் கெட்டவர் என்கிறார்கள்—எது சரி?

ப: லெனின் நல்லவர்—சிறந்த அரசியல் தத்துவமேதை! அவரைப் பின்பற்றுவதாக கூறுபவர்கள்தாம் இன்று அவரது கொள்கைகளை புதைகுழிக்கு அனுப்பி, லெனின் பெயரை நாசமாக்கி வருகிறார்கள்?

ஃ

ட. வீரசிங்கம்.
நீர்கொழும்பு வீதி,
வத்தளை.

கே: தமிழரசுக் கட்சியை சேர்ந்த வவுனியா பா.உ. திரு. செல்லத்தம்புவைப் பற்றிய தங்கள் கருத்தென்ன?

ப: வன்னி மாவட்டத்தின் தன்னேரில்லாத் தளபதி!

கே: இலங்கை வாழ் தமிழ் மக்களின் உரிமைகளை பறித்து அடிமை நிலைக்குத் தள்ளிய புதிய அரசியல் சாசனத்தில் கையொப்பமிட்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களை தரமுடியுமா?

ப: திருவாளர்கள், ஆ. தியாகராசா, சி. எக்ஸ். மாட்டின் சி. அருளம்பலம், பீ. ஆர். செல்வநாயகம், எம். சி. சுப்பிரமணியம் (நியமன உறுப்பினர்) ஆகியோர்!

குயுக்தியாரிட மிருந்து பதில் பெற விரும்பும் வாசகநேயர்கள் தவறுமல் பின்வரும் முகவரியை அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

திருவாளர் குயுக்தியார்,
மே/பா.
சுதந்திரன்
த. பெ. இல. 1183
கொழும்பு.

# சங்கப் பலகை

## தமிழினத்தின் விடுதலைக் குரல்

எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த இஸ்லாமியத் தமிழர் கே. எஸ். ஏ. கபூர், தமிழரசுப்பாசறையில் ஊறி வளர்ந்த இலட்சிய எழுத்தாளர்களில் ஒருவர். அவரது எழுத்துக்கள் ஆழமானவை; தெளிவு நிறைந்தவை: சிந்திக்கவைப்பவை.

சுதந்திரனில் அவரது பல அரசியல் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. அப்படி வந்த கட்டுரைகளையும் வேறு சில கட்டுரைகளையும் தொகுத்து "தமிழினத்தின் விடுதலைக் குரல்" எனும் நூல் வெளிவந்துள்ளது.

ஈழத்தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தை உலக நாடுகளின் விடுதலைப் போராட்டங்களுடன் ஒப்பிட்டும்—தமிழினம் அடைந்துள்ள கொடுமைகளை விளக்கியும்—தமிழ்த்தேசிய இனத்தின் தனித்துவத்தை ஒப்புக்கொள்ளாத பொதுவுடமையரைச் சாடியும் — உண்மையான பொதுவுடமைத் தத்துவத்தை எடுத்து விளக்கியும்-பல்வேறு நாடுகளிலும் சிறுபான்மை இனங்களுக்குதரப் பட்டுள்ள அரசியல் உரிமைகளை எடுத்துக்காட்டியும் — இந்நூலில் திரு. கபூர் அவர்கள் திரட்டித்தந்துள்ள கருத்துக்கள் ஈழத்தமிழினத்துக்கு பெரிதும் பயனுள்ளவை—

இந்நூலுக்கு கோப்பாய் பா. உ. சிந்தனைச் சிற்பி சி. கதிரவேற்பிள்ளை தந்திருக்கும் முன்னுரையே முத்தாக தித்திக்கிறது. இந்த முன்னுரையில் தமிழினம் தனி நாடு பெற வேண்டிய அவசியத்தை திரு. கதிரவேற்பிள்ளை தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார்.

விடுதலைப்போராட்டவீரர்களுக்கு இந்நூல் ஒரு சிறந்த ஆயுதம் என்பதில் ஐயமில்லை.

வெளியிட்டவர்:—சி. கதிரவேற்பிள்ளை பா. உ. கிடைக்குமிடம்:— இலங்கைத் தமிழரசுக்கட்சி, 25, இரண்டாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்

விலை:— குறிப்பிடப்படவில்லை.

## வங்கம் தந்த பாடம்

வங்க இனத்தின் சுதந்திரப்போராட்ட வரலாற்றை எடுத்து விளக்கியும், வங்க மக்களின் விடுதலைப் போராட்டத்துடன் ஈழத்தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தை ஒப்பிட்டும், தக்க சான்றுகளுடன் இலங்கைத் தமிழரசுக்கட்சித்தலைவரும், தமிழர் கூட்டணி செயலாளர் நாயகமுமான நாவலர் அ. அமிர்தலிங்கம் அவர்கள் ஆற்றிய உரையொன்றின் தொகுப்பே 'வங்கம் தந்த பாடம்' எனும் தலைப்பில் தனி நூலாக வெளியிடப் பட்டுள்ளது.

இலங்கைத் தமிழன் ஒவ்வொருவனும் வாசிக்கவேண்டியது இந்நூல்.

வெளியிட்டவர்கள்:- பண்ணுகம், அண்ணுகலைமன்றம்

விலை:— ரூபா ஒன்று.

## வன்னியில்தமிழரசு!

வவுனியா பாராளுமன்ற உறுப்பினர் திரு. சே. மா. செல்லத்தம்பு அவர்கள் தேசிய அரசப்பேரவையில் எழுப்பிவரும் உரிமைக்குரலை ஈழத்தமிழக மக்கள் நன்கறிவர்.

தமக்கேயுரிய சிம்மக்குரலில், புள்ளிவிபரங்களுடன் அவர் தேசிய பேரவையில் ஆற்றுகின்ற உரைகளை ஆளுங்கட்சியினரே மெய்ம்மறந்து கேட்டுப்பாராட்டிய பல நிகழ்ச்சிகளுண்டு. அமைச்சர் கொல்வின், அமைச்சர் கொப்பேகடுவ போன்றோரே திரு. செல்லத்தம்புவின் ஆற்றலை மனம்திறந்து பாராட்டியிருக்கிறார்கள்.

அத்தகைய அருமையான அவரது பாராளுமன்றச் சொற்பொழிவுகள் சிலவற்றை திரட்டி 'வன்னியில் தமிழரசு' எனும் தலைப்பில் நெடுங்கேணியைச் சேர்ந்த தமிழன்பன் திரு. க. ம. பீட்டர் பொன்கலன்ட் அவர்கள் நூலாக வெளியிட்டுள்ளார்.

இந்நூலில், வவுனியா தொகுதிக்கு திரு. செல்லத்தம்பு ஆற்றிய சேவைகள் சிலவும் இடம் பெற்றுள்ளன

இந்நூல் கடந்த செப்டம்பரில் காங்கேசன் துறையில் நடைபெற்ற தமிழரசு மாநாட்டில் வழக்குரைஞர் திரு. எஸ். சி. சந்திரகாசன் அவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

# தோட்டத் தொழிலாளர்கள் மீது பொலிசாரின் அட்டூழியம்!

## இ. தொ. கழகக் கூட்டத்தில் கண்டனம்!

'சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டி, பொதுமக்களுக்கும், அவர்களது உடமைகளுக்கும் பாதுகாப்பளிக்க வேண்டிய பொலிசார், இன்று பொதுமக்களுக்கு துன்பத்தைக் கொடுப்பது மட்டுமல்லாமல் அவர்களின் உயிருக்கே யமனைக்கொண்டு வருகிறார்கள். [illegible] இராகலை [illegible] செய்யப்பட்ட திரு. அ. சுப்ரமணியம் பொலிசாரால் அடித்துக்கொலை செய்யப்பட்டிருப்பது இதற்கு தகுந்த உதாரணமாகும்.

இவ்வாறு 7-10-1973 பி. ப. 2 மணியளவில் இராகலை இ. தொ. கழக பணிமனையில் மாவட்டத்தலைவர் திரு. எஸ். மாணிக்கம் அவர்களின் தலைமையில் நடைபெற்றமாவட்டக்குழுத் தலைவர்கள் கூட்டத்தில் பேசிய இராகலை (இ. தொ. கழக) மாவட்ட உதவிப்பிரதிநிதி திரு. மு. நடராஜமூர்த்தி கூறினுர்.

அவர் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:-

கடந்த காலங்களில் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் ஆஸ்பத்திரிகளில் கடமைபுரிந்த டாக்டர்களிடம் புரிந்த அட்ட காசங்களை

(6ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேசிய அரசுப் பேரவையில் சட்டமறுப்புக் கடிதங்கள் ஏற்படுத்திய சலசலப்பு!



பீட்டர் கெனமன்:— ''எனது தமிழரசுக்கட்சி நண்பர்களும் ஒரு சட்ட மறுப்பு இயக்கத்தை நடத்தி வருகிருர்கள். அவர்கள் உண்ணுவிரதம் இருக்கிருர்கள். அவர்கள் மிகவும் புத்தி சாலிகளும் கூட: அவர்கள் முத்திரை ஒட்டாமல், அல்லது பழுதான முத்திரையொட்டி கடிதங்களை அனுப்பும் ஒரு இயக்கத்தைத் தொடங்கியிருக்கிருர்கள். இந்த இயக்கம் எவ்வளவு தூரம் சென்றுள்ளதென்பது எனக்குத் தெரியாது. நாங்கள் முந்தாநாள் தபால் திணைக்களத்துடன் தொடர்பு கொண்ட போது இத்தகைய 67 கடிதங்கள் அனுப்பப்பட்டதாக அறிய வந்தோம். காந்திய வழியில் துணிவுடனும் தைரியமாகவும் போராடப் போவதாக கூறும் இவர்கள் அக்கடிதங்களில் தங்கள் சொந்தப் பெயர்களை போடக்கூட ஆயத்தமாக இல்லை...''

தர்மலிங்கம்:— யார் அப்படிச் சொன்னது?

கெனமன்:— கொம்யூனிஸ்ட்கட்சியைச் சேர்ந்த வி. பொன்னம்பலத்தினல் கையெழுத்திடப்பட்ட கடிதமும் அங்கிருந்தது.

வி. என். நவரத்தினம்:— இதை நாங்கள் எதிர்பார்த்தோம். நாங்கள் கடிதங்கள் அனுப்பியுள்ளோம் ........... (குறுக்கீடுகள்)

திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பு:— ''you dare not say that — நீர் அப்படிக் கூறக் கூட முடியாது!''

கெனமன்:— நான் அதையே சொல்லுகிறேன்!

செல்லத்தம்பு:— பிரதமருக்கு நாங்கள் எங்கள் பெயர்களை அனுப்பி விட்டோம்.

கெனமன்:- சின்ன சின்ன தண்டனைக்குரிய சட்டங்களாகப்பார்த்து அவற்றை மீறும் உங்கள் சட்ட அறிவு பாராட்டத்தக்கது!

செல்லத்தம்பு:- நீர் அத்தகைய குற்றச் சாட்டை எமக்கு எதிராக சாட்ட முடியாது!

ஃ ஃ

திரு. தர்மலிங்கம்:- கௌரவ வீடமைப்பு நிர்மாண அமைச்சர் தமதுபேச்சிலே எங்கள் சட்டமறுப்பு இயக்கம் பற்றிக் கூறியது பற்றி ஒரு குறிப்புக் கூற வேண்டியிருக்கிறது. அமைச்சர் பேசும் பொழுது நாங்கள் கௌரவ முதலமைச்சருக்கு அனுப்பிய கடிதத்தில் கையெழுத்துப் போடப்படவில்லை என்றும் முகவரி எழுதவில்லையென்றுங்குறிப்பிட்டால் இதோ என்னிடம் நாங்கள் அனுப்பிய கடிதத்தின் பிரதியிருக்கிறது.

கெனமன்:- நான் அப்படி கூறவில்லை.

சபாநாயகர்:- நீங்கள் ஆங்கிலத்தில் பேசினுல், எங்கள் எல்லோருக்கும் உமதுபேச்சு நன்கு புரியும்!

தர்மலிங்கம் (ஆங்கிலத்தில்):- பிரதமருக்கு நாங்கள் அனுப்பிய சட்டமறுப்பு கடிதத்தில் எம்மில் சிலர் கையெழுத்துப் போடவில்லையென்று குறிப்பிட்டார்.

கெனமன்:- நான் விளங்கப்படுத்தவா? 67 கடிதங்கள் தபால் இலாகாவுக்கு கையளிக்கப்பட்டிருப்பதாக கூறினேன். அந்தக் கடிதங்களை அனுப்பியவர்களில் தங்கள் சொந்தப் பெயரைப் போடும் துணிவு அற்ற சிலரும் இருக்கிருர்கள் என்றே கூறினேன்.

தர்மலிங்கம்:- அத்தகைய கடிதங்கள் உமக்குக் கிடைத்தனவா?

கெனமன்:- Of Course!

டாக்டர் என்.எம்:- அவை சட்ட விரோதக்கடிதங்கள்!

தர்மலிங்கம்:- பிரதமருக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள் வீடமைப்பு அமைச்சருக்கு எப்படிக் கிடைத்தன என்பது எனக்கு விளங்கவில்லை.

கெனமன்:- அக்கடிதங்கள் முறையான முத்திரையைக் கொண்டிருக்கவில்லை. அவற்றைப் பார்வையிடும் படி தபாலமைச்சர் எங்களுக்கு காண்பித்தார்!

தர்மலிங்கம்:- அவை ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று உமக்கு எப்படித் தெரியும்!

கெனமன்:- நீங்கள் ஒரு அண்டை வெட்டியெடுத்து......!

தர்மலிங்கம்:- இதோ, நீங்கள் பார்வையிடலாம்...!

டாக்டர் என். எம். :- உமது கடிதத்தை நீர் இன்னும் தபாலில் சேர்க்கவில்லையா?

தர்மலிங்கம்:- இது ஒரு 'மாதிரிக் கடிதம் இந்தச் சபை உறுப்பினர்களுக்குக் காட்டாவே இங்கு கொண்டு வந்தேன்.

கெனமன்:- நான் அனுப்பப்பட்ட கடிதங்களைப் பற்றியே பேசுகிறேன்.

தர்மலிங்கம்: பிரதமருக்கு மேற்படி சட்ட மறுப்புக் கடிதங்களை அனுப்பிய தொண்டர்களின் பெயர் முகவரிகளைக்கொண்ட ஓர் அதிகாரபூர்வமான பட்டியலைப் பிரதமருக்கு நாங்கள் அனுப்புவோம். பிரதமர் தமக்கு விரும்பியபடி நடவடிக்கையை எடுக்கட்டும்!

டாக்டர் என். எம்.:- சட்டவிரோதமாக அனுப்பப்படும் எந்தக்கடிதங்களையும் பிரதமர் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை!

தர்மலிங்கம்:- அந்தக் கடிதம் சட்ட விரோதமாக அனுப்பப்படமாட்டாது!"

(4-10-73 தேசிய அரசுப்பேரவையில் நடைபெற்ற 'நிகழ்ச்சி

## தபால் சட்டமறுப்பு தொண்டர்கள் பட்டியல்!

2-10-73ல் முத்திரையைவெட்டிஒட்டி சட்டமறுப்பு கடிதங்களை பிரதமருக்கு அனுப்பி வைத்த தமிழர் கூட்டணித் தொண்டர்கள் 106 பேரின் பெயர், முகவரிகள் 14-10-73 சுதந்திரன் இதழில் தரப்பட்டிருந்தன. அதில் விடுபட்டுப்போன தொண்டர்களின் பெயர்கள் வருமாறு:-

(107) வே. நாகலிங்கம், கி. ச. உறுப்பினர், முள்ளியவளை, (108) மு. கிருஷ்ணபிள்ளை, முள்ளியவளை (109) க. சுந்தரலிங்கள், வவுனியா, (110) க. கந்தசாமி, முள்ளியவளை (111) சி. வேலுப்பிள்ளை, முள்ளியவளை (112) வி. சவுரியேல், சென்மேரீஸ்வீதி, விடத்தல் தீவு (113) சி. சௌந்தரநாயகம், காத்தான்குளம், அடம்பன்.

---

# 'முற்போக்கு' வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறுகிறது!

தின இதழொன்றில் ஒரு செய்தி வெளிவந்திருந்தது. இலங்கை முற்போக்கு எழுத்தாளர்பேரவை யாழ்ப்பாணத்தில் விரைவில்கூட இருப்பதாகவும்— அதில் அந்தரங்கு, இத்தரங்கு எனப் பல அரங்குகள் அரங்கேற்றப்பட இருப்பதாகவும்— அதற்கு ஒரு குழு நியமிக்கப் பட்டிருப்பதாகவும் அச் செய்தி கூறியது. அகில இலங்கை எழுத்தாளர் சங்கத்தை முற்போக்கு லேபலுடன், இன்று வெறும் லேபல் எழுத்தாளர்களாக இருப்பவர்கள் கூட்டுகிருர்கள் என்றதும் எனக்குச் சிரிப்புச் சிரிப்பாய் வந்தது.

### லேபல் எழுத்தாளர்கள்

எழுதிஓய்ந்திருப்பவர்கள், அவர்களை முன்னாள் எழுத்தாளரென்றும் ஏன் 'காலஞ்சென்ற' எழுத்தாளர்கள என்றும்கூட எழுதலாம். முற்போக்கென்றபேச்சோடு ஒருசில கவிதைகளையும், கட்டுரைகளையும் எழுதியவர்களும் அக்குழுவில் இருக்கக் கண்டேன். ஓய்வுபெற்ற வெறும் லேபல் எழுத்தாளர்கள் எதற்காகச் சந்திக்குவருகிருர்கள் என்பதுதான் விளங்கவில்லை. நாமும் இருக்கிறோம், இன்னும் சாகவில்லை என்பதை ஒரு சிலருக்குத் தெரிவிக்கத்தான் இந்தத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டதுபோல்தான்எனக்குத் தெரிகிறது.

முன்னாள் சுதந்திரன் உதவி ஆசிரியர் பிரேம்ஜி அப்பொது பல எழுத்தாளர்களுடன் கடிதப் போக்குவரவு செய்து இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை நிறுவினுர். கொழும்பு சகிராக் கல்லூரியில் நல்லதொரு விழாவையும் எடுத்தார் பலவருடங்களின் முன். அதற்குப் பின் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் வெறும் பத்திரிகைச்செய்திகளில் மட்டும் எழுத்தாளர் சங்கம்இருப்பதாகக்காட்டிக் கொண்டது. அதன்பின் அங்கும், இங்கும் சிறு கூட்டங்களை வைத்து இந்த முற்போக்கெழுத்தாளர் சங்கம் வேதாளம் முருங்கைமரத்தில் ஏறிய கதையாகக் காணப்பட்டது. திடுதிப்பென்று கொட்டுமேளம் கொட்டிக்கொண்டு— பறைமேளம் அடித்துக்கொண்டு சந்திக்குப் புறப்பட்டிருக்கின்றது.

### இதுதான் முற்போக்கு

இந்த முற்போக்கு எழுத்தாளர்கள்—ஆண்டாண்டு காலமாக சாதியையும், தொழிலாளரையும், ஒரு தேசாபிமானியையும் நம்பி எழுத்தாளரென்று மார் தட்டுகிருர்கள்.

சாதியும், தொழிலாளரும்; முற்போக்கு, சர்வதேசியம், அந்நிய ஏகாதிபத்தியம், சர்வதேசக் கண்ணேட்டம் என்ற சொற்களைத் தமது எழுத்துக்களில் இழையோடவிட்டு தாமும் முற்போக்காளர்தாம் என்று தம்பட்டம் அடிக்கிறது. இவ் வார்த்தைகள் இல்லை என்ருல் கத்தியும் கருவியும் இல்லாதசவரத்தொழிலாளியின் கதையாகத்தான் இவர்களின் முற்போக்கு இருக்கும்.

எங்கு தலையைக் காட்டினுலும் குட்டையைக் குழப்புவதே இவர்கள் தலைவிதி. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சாகித்திய விழாவைக் குட்டை குழப்பி அவ்வப்போது இலக்கியத் திருட்டுக்களும், இலக்கிய விபசாரித்தனமும் செய்துவரும் இவர்கள் நாம்தான் சர்வவல்லமைபடைத்த எழுத்தாளர்கள் என்று தம்புராப் போட்டு வெளிக்கிட்டிருக்கிருர்கள். முற்போக்குப் போர்வையில்— மறைந்த தமிழ் எழுத்தாளர் ஒருவரை' சுறியும் பறியும், என்று 15 ஆண்டுகளுக்குமுன்எழுதிருக்குவிட்டிருக்கும் எழுத்தாளர்கள் திரு. சோ. சிவபாதசுந்தரம், திரு. கே. எஸ். நடராசா, திரு. தேவன் யாழ்ப்பாணம், திரு. சி. சரவணபவன் வாழ்வும் எழுத்தும் எத்தகையது! இந்தமுற்போக்குக் குஞ்சுகளின் எழுத்து எத்தகையது என்பதை நாடறியும். நான் நன்கு அறிவேன். இன்று ஊர்காவற்றுறைப் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் வழி நடாத்திய சங்கத்தை இன்று இதுகள் சரக்கெதுவுமில்லாக் கிலுகிலுப்பைகள் நடாத்துவதென்ருல் இதுதான் காலத்தின் கோலமோ?

1970ம் ஆண்டு மேமாதம் கூட்டு முன்னணி ஆட்சிக்கு வந்ததும் திடீர் அமைச்சர் குமாரசூரியரின் பின் இந்த முற்போக்குகள் போர்க்கோலம் பூண்டனர். எழுத்தாளன் பற்றியும், பொருதரம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அத்துடன் குடிகாரன் பேச்சு விடிந்தாற் போச்சு என்றவாறு எல்லாம் கள்ளுக் கொட்டில் வேதாந்தமாக முடிந்தது.

### கல்லாநிதிகள்

தமிழ் நாட்டு சஞ்சிகைகளை முற்றுமுழுதாகத் தடை செய்தார்கள். இங்குள்ள எழுத்தாளருக்கு விடிவு காலம் ஏற்பட்டுவிட்டது. பல சஞ்சிகைகள், நூல்கள் வெளிவர அரசு உதவப் போகின்றது. நிதியுதவி, விற்பனை உதவி, விளம்பர உதவி என்றெல்லாம் வெறும் வாயை மென்ருர்கள். அவலை நினைத்து உரலை இடித்த கதையாக முடிந்தது இன்றைய நிலை. கடந்த 4 வருடங்களில் இந்த நாட்டு எழுத்தாளர்கள் இலவுகாத்த கிளி கதையாக இருக்கிருர்கள். நல்ல நூல்களை வெளியிட

## மாநாடு கூட்டும் மானம் கெட்ட பிறவிகளே! ஆறு கேள்விகள் இதோ-பதில் சொல்வீரா?

சாதிச்சேற்றைமுகம்முழுக்க அப்பிய நாதன்கள் இம்முற்போக்கு அரங்கில் 'தத்தித் தாதெய்' என்று ஆடவரப் போகிருர்கள். இவர்கள் இப்படி எதற்காக ஆடிவரவும், பாடிவரவும், முடிவு செய்தார்கள் என்று தெரியவில்லை.

### கிலுகிலுப்பைகள்

இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தை வெற்றிகரமாக நடாத்திப் பல ஆக்கங்கள் [illegible] இலங்கைத் தமிழ் நூல்கள் பற்றியும் அறிக்கைக்கு மேல் அறிக்கை விட்டனர். வந்தது வசந்தம், வந்தது வசந்தம் என்று தலைவி மனம் குழம்பியிருக்க 'அவரோ வாரார்' என்ற நிலைதான் இன்றிருக்கிறது. இந்த அரசு எழுத்தாளருக்கு என்ன செய்ய வேண்டும் என்று நானும் 'வேலிமினைக் கெட்டு' சுதந்திரனில் ஒருகட்டுரை தீட்டினேன். சும்மா இருந்த பாவம் வரதர், முற்போக்குகளினுல் ஒன்றியத் தின தலைவரானுர். இரண் விரும்பும் எழுத்தாளனும், அவன் முற்போக்கோ, நற்போக்கோ அந்த நூல்களை வெளியிட முன்வரும் பதிப்பகத்தாரோ இன்று இடித்த புளியாக இலங்குவதை இந்த முற்போக்கு எழுத்தாளர்கள், 'கல்லா நிதிகள்' மறுக்கவோ அன்றி மறைக்கவோ முடியாது.

### கேள்விகள்

இன்று கூட்டம் கூடும் ஒன்றிய உறுப்பினர்கள் கீழ்க்

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# புத்தக சஞ்சிகைகள் இறக்குமதி!

இந்தியத் தமிழ் நாட்டுக்கும் ஈழத்தமிழர்களுக்கு மிடையேயிருந்து மொழி, கலாசார, கலை இலக்கியத் தொடர்புகளை முற்ருகத்துண்டித்துவிடவேண்டும்; இப்படிச் செய்வதன் மூலம் ஈழத்தமிழர்களைத் தனிமைப்படுத்தி, ஈழத்தமிழினத்தின் தனித்துவத்தை அழித்து விடமுடியும் என்று சிங்கள ஏகாதிபத்திய வெறியர்கள் நெடுங்காலமாகவே கனவு கண்டு வருகிருர்கள்!

1970ம் ஆண்டு ஐக்கிய முன்னணி அரசு ஆட்சிபீடமேறிய பின்னர் இந்த 'இலக்கிய கலை கலாசாரத்தொடர்புத் துண்டிப்பு' முயற்சிகள் வெகுமும்முரமாக முடுக்கி விடப்பட்டது. ஆட்சியிலுள்ளவர்கள், இச் சதிநோக்கத்தை அடிமனதில் வைத்துக்கொண்டு—வெளியே நுனி நாக்கினுல் இனிக்கப்பேசத்தொடங்கினுர்கள்! எப்படி?

''உள்ளூர் தமிழ் எழுத்தாளர்களின் திறமையும் ஆற்றலும் வெளிப்படுவதற்கும், உள்நாட்டில் தமிழ் சஞ்சிகைகள், பத்திரிகைகள் தலைதூக்குவதற்கும் இந்திய தமிழ் சஞ்சிகைகள் தடையாக இருக்கின்றன' என்று ஒரு கருத்தை வைக்கத் தொடங்கினுர்கள்—

இதற்கு "ஆமாம் சாமி" போடத்தொடங்கினுர்கள் தன்னம்பிக்கையும் சுய ஆற்றலும் அற்ற கம்யூனிஸ்ட் எழுத்தாளர்கள் சிலர். இந்திய தமிழ் சஞ்சிகைகளை தடைசெய்ய வேண்டும் என்று இவர்களும் சேர்ந்து ஒப்பாரி வைக்கத் தொடங்கினுர்கள்!

'தமிழ் எழுத்தாளர்கள்' என்று லேபல் வைத்துக் கொண்டிருக்கும் கம்யூனிஸ்டுகளின் இந்த ஒப்பாரி ஆட்சியாளரின் காதுகளில் காஞமிர்தமாக விழுந்தது.

தமிழ் எழுத்தாளர்கள் கேட்கிருர்கள் — அதனுல் இந்திய தமிழ் சஞ்சிகைகளை தடைசெய்யப்போகிறேம்—என்று கூறி அந்த முயற்சியில் இறங்கினுர்கள்!

இதை எதிர்த்து ஈழத்தமிழ்க் குலம் குமுறியெழுந்தது—தமிழ் புலவர்களும், அறிஞர்களும் இந்த அநீதிக்கு எதிராக குரல் எழுப்பினர்.

இதன் பயனுக இந்திய தமிழ் சஞ்சிகைகளின் இறக்குமதிக்கு கட்டுப்பாடு விதிக்கப்போகிறேம் என்று இறங்கி வந்தார்கள்; ஈழத்து எழுத்தாளர்களை ஊக்கப்படுத்துதல் எனும் 'கண்துடைப்பு'டன் அமைச்சர் குமாரசூரியரின் ஆதரவுடன் 'ஒன்றியம்' ஒன்றும் உருவாக்கப்பட்டது!

பின்னர் நடைபெற்றதென்ன? பல ஆயிரமாக வந்து கொண்டிருந்த இந்திய தமிழ் சஞ்சிகைகள் சில ஆயிரமாக, சில நூருக குறைக்கப்பட்டன; அதுமட்டும் கச்சிதமாக நடைபெற்றது. ஆனுல், உள்ளூர் தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் தொடங்கப்பட்ட கண்துடைப்பு ஒன்றியம் மட்டும் இருந்த இடம் தெரியாமல் புகைந்து போய்விட்டது!

வாக்குறுதியளிக்கப்பட்டதுபோல ஈழத்து தமிழ் எழுத்தாளர்களுக்கு அரசு எந்த வித ஊக்கமும் ஆக்கமும் தரவில்லை; நூல் வெளியிடுபவர்களுக்கு பத்திரிகை வெளியிடுபவர்களுக்குகிஞ்சிற்றும் உதவவில்லை—உதவ வில்லையென்பது மட்டுமல்ல — பத்திரிகைத் தாளின் விலையை கூட்டி இன்னும் அவர்களை உபத்திரவத்துக்குள் தள்ளியதுதான் கண்டமிச்சம்!

இந்திய தமிழ் சஞ்சிகைகளைத் தடைசெய்வதில் — அல்லது இறக்குமதியை கட்டுப்படுத்துவதில் ஆட்சியாளர் காட்டுகின்ற ஆர்வத்தில், அக்கறையில் பத்தில் ஒன்ருவது உள்ளூரில் தமிழ் பத்திரிகைகள், சஞ்சிகைகள் வெளியிடுபவர்களுக்கு உதவி செய்வதில் காட்டுவதாகக் காணேம்! இது நடைமுறையில் நாம் கண்ட உண்மை.

இதனுல்தான் ஆட்சியாளரின் நோக்கத்தில் நாம் ஐயம் கொண்டுள்ளோம்! உள்ளூர் தமிழ் சஞ்சிகைகள் வளர வேண்டுமென்பதைவிட — வளர்வதற்கு உதவிபுரியவேண்டுமென்பதைவிட—இந்திய சஞ்சிகைகளை எப்படியும் தடை செய்து விடவேண்டும் என்பதுதான் இவர்களது அந்தரங்க ஆசையாக இருந்து வருகிறது!

இந்திய தமிழ் சஞ்சிகைகள் அனைத்தும் தரமுள்ளவையென்ரே—அனைத்துமே தங்குதடையின்றி இங்கு இறக்குமதி செய்யப்படவேண்டியவையென்ரே நாம் என்றுமே கூறியதில்லை. ஆனுல் சிங்கள இனவெறியர்களின் அரசியல் பின்னணியுடன் கூடிய அந்தரங்க ஆசையைதெரிந்து கொண்ட பின்னரே—தமிழ் சஞ்சிகைகள் இறக்குமதிக்கு போடப்படும் கட்டுப்பாடுகளையும் தடைகளையும்நாம் எதிர்க்கிறேம்!

ஈழத்தமிழர்கள் எந்தெந்த நூல்களை அல்லது சஞ்சிகைகளை படிக்கலாம்; அல்லது படிக்கக்கூடாது என்பதை முடிவு செய்யவேண்டியவர்கள் ஈழத்து தமிழ் அறிஞர்களே தவிர — ஆட்சியாளரும் அவர்களின் கையாட்களான சில லாநிதிகளுமல்ல!

இவ்வாரம், புத்தகங்கள் சஞ்சிகைகள் இறக்குமதி பற்றி விசாரணை செய்வதற்காக டாக்டர் கருணுதிலக தலைமையில் கல்வியமைச்சினுல் சமர்ப்பிக்கப்பட்ட குழு, தனது அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறது!

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சஞ்சிகைகள், புத்தகங்களில் வியாபாரிகள் கொள்ளை லாபம் அடிப்பதை தடுக்க தக்க நடவடிக்கை யெடுக்கப்படவேண்டுமென்று இந்தக்குழு சிபார்சு செய்துள்ள கருத்தை நாம் வரவேற்கிறேம்!

''இந்தியாவிலுள்ள ஒருவர் இங்கு வெளியாகும் சஞ்சிகை யொன்றை சந்தா செலுத்தித் தருவிக்க அனுமதி கோரிய போது இந்திய ரிசர்வ் வங்கி அதற்கு அனுமதியளிக்க மறுத்துவிட்டது'' என்ற தகவலும் இந்த அறிக்கையிற் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தத் தகவல்உண்மையாயிருக்கலாம்—ஆனுல், இந்தியாவிலிருந்து தனிபபட்டமுறையில் சந்தாமூலம், திருக்கோவில், செந்தமிழ்ச் செல்வி, போன்ற இன்னும் சில சமய இலக்கிய அறிவு நூல்களைத் தருவிப்பதற்காக, ஈழத்தமிழன்பர்கள் பலர் இலங்கை மத்திய வங்கியிடம் அந்நிய செலாவணிக்கு விண்ணப்பித்த போது — அது அவர்களுக்கு மறுக்கப்பட்டுவிட்டதென்பதையும் நம்மால் நிரூபிக்க முடியும்! ஆக, சந்தா முறையில், சஞ்சிகைகளைத் தருவிப்பதற்கு இந்திய ரிசர்வ் வங்கியும் அந்நிய செலாவணி வழங்குவதாக இல்லை. இலங்கை மத்திய வங்கியும் அந்நிய செலாவணி வழங்குவதாக இல்லை—என்பதே உண்மை நிலையாகும். எனவே இது குறித்து இரு பகுதியினரும் பேசவேண்டியது அவசியம் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேம்.

இந்திய தமிழ் புத்தகங்கள் சஞ்சிகைகள் இறக்குமதியை மேலும் வெட்டும் எந்த நடவடிக்கையையும் நாம எதிர்க்கின்றேம். இந்நாட்டுத் தமிழ் மக்கள் எதிர்க்கின்றூர்கள். இப்போதுள்ள இறக்குமதியாவை மேலும் வெட்டுவதென்பதன் பொருள் — நடைமுறையில் முற்றுகத் தடைசெய்வதாகவே யிருக்கமுடியும்.

சட்டவிரோதமானமுறையில்—இந்தியாவிலிருந்து ஆபாச குப்பைகள் ஏதாவது இங்குவந்து சேர்ந்தால் அதைத் தாராளமாக தடைசெய்யட்டும்இந்தியாவிலிருந்து மட்டுமல்ல — MEN ONLY, WOMAN ONLY என்று எத்தனையோ கையால் தொடவும் கூசும் வெளிநாட்டு ஆபாசக் குப்பைகள் இங்கு விற்பனையாகின்றன. அவற்றையெல்லாம் முற்றுகத் தடைசெய்யட்டும்!

அதே வேளையில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படவேண்டிய புத்தகங்கள், சஞ்சிகைகள் எவை எவையென்பதை தெரிவுசெய்யும் பொறுப்பை கம்யூனிஸ்ட் கலாநிதிகளிடம் விடாமல் — கட்சி சார்பற்ற தமிழ் அறிஞர்கள் எழுத்தாளர்களைக்கொண்ட ஒரு குழுவை நியமித்து அந்தக் குழுவிடமே ஒப்படைக்கும்படியும் கேட்டுக் கொள்ளுகிறேம்!

# புதிய வரவு செலவுத் திட்டம்

# ஒரு கண்ணோட்டம்!

என்ன இருந்தாலும் நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா கெட்டிக்காரர்தான்! எப்படியும் தங்கமூளை தங்கமூளைதான். அது வெறும் பித்தளை மூளையாக முடியுமா?

நவம்பர் முதலாம் திகதி தனது வரவு செலவுத்திட்ட உரையை—அதாவது ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் 4வது ஆண்டு வரவுசெலவுத் திட்ட உரையை — தேசிய அரசுப்பேரவையில் நிகழ்த்தியிருக்கிருர் அவர்.

வரவுசெலவுத்திட்டத்தின் போது நாட்டு மக்களிடம் திட்டுவாங்காமல் தவிர்ப்பதற்காக—தந்திரமாக தமது உரையை தயாரித்திருக்கிருர் அவர்!

சரியாக ஒரு மாதத்துக்கு முன்னரே— அதாவது அக்டோபர் முதலாம் திகதியிலிருந்து மக்களின் அன்ருட அத்தியாவசிய உணவுப் பொருட்களை வெட்டிக் குறைத்தும், விலையைக் கூட்டியும் ஒரு குட்டி 'பட்ஜெட்டை' தந்த மகா விண்ணர் அல்லவா நமது நிதியமைச்சர்!

அரிசியை அரைக்கொத்தாக்கினுர் — மேலதிக அரிசியை இல்லாமற்செய்தார். அதன் பலனுக — இன்று யாழ்ப்பாணத்திலே அரிசி கொத்து ஏழரை ரூபா விற்கப்படுகிறதே—பசியால் மக்கள் கஷ்டப்படுகிருர்களே—நாட்டில் பட்டினிச்சாவுகள் நிகழ்கின்றனவே —இது அவரது கண்களுக்கு இன்னும் புரிவதாக இல்லை—

மா விலையைஇருத்தல் எழுபது சதமாக உயர்த்தினுர்—ஒரு கூப்பனுக்கு ஒருவாரத்துக்கு ஒரு இருத்தல் மா மட்டுமே என்று கட்டுப்பாடு விதித்தார் — பாண்விலையை 70சதமாக கூட்டினுர்; உணவு விடுதிகளில் அரிசி, மாவு உணவுகளுக்கு வாரத்தில் இருநாட்கள் தடைவிதித்தார்—சீனி விலையைக் கூட்டினுர் — மண்ணெய் விலையை பல முறை அதிகரித்தார்— இப்படி டாக்டர் என். எம். பெரேராவும் அவரது அரசும் இழைத்து வரும் கொடுமைகளினுல்— மக்கள் படும் துயர் சொல்லொணுதவை.

பாணுக்கு கியூ வரிசையில் கால் கடுக்க காத்து நின்றும் அது கிடைக்காததால் வீட்டுக்கு வந்து பச்சைத் தண்ணீரைக் குடித்துவிட்டு ஒட்டிய வயிற்றுடன் கிடப்போர் பல்லாயிரம் பேர்! பாண் கிடைக்கவில்லையென்பதால் — தன் மனைவி பட்டினி கிடப்பாளே என்பதைத் தாங்க முடியாமல் தற்கொலை செய்துகொண்டிருக்கிருன் மலைநாட்டில் ஒரு தமிழ்த்தொழிலாளி.

மக்கள் இன்று பெருமூச்சு விடுகிருர்கள் — அவர்கள்



வயிற்றில் மூண்டெழுகின்ற பட்டினி எனும் பெரு நெருப்பு பற்றியெரிகின்றது. நீங்கள் ஆண்டது போதாதா — நாம் மாண்டது போதாதா என்று கொதித்துக் குமுறுகிருர்கள் மக்கள்—

உணவுப் பொருட்களுக்கு கட்டுப்பாடும் தட்டுப்பாடும் ஏற்பட்டு ஒரு திங்கள் முடியவில்லை அதற்குள் நாட்டில் பட்டினிச் சாவுகள் ஏற்படவும் தொடங்கிவிட்டன.

இதேரீதியில் போனுல்— எதிர்காலத்தை நினைக்கும் போது பயங்கரமாகத் தெரிகிறது. போதாக் குறைக்கு காலரா நோய் வந்து வடக்கே தமிழ் மக்களை வாட்டி வதைக்கிறது!

மக்களுக்கு போஷாக்குள்ள—போதிய உணவு கிடைக்காதபோது அவர்களை நோய் பிடிப்பது ஒன்றும் எதிர்பார்க்கமுடியாததல்ல!

உணவு வெட்டுக்கு எதிராக பல்லாயிரம் மக்கள் அக்டோபர் 19ம் திகதி கொழும்பில் சத்தியாக்கிரகம் அனுட்டித்து, தங்கள் பசி வயிற்றை ஆட்சியாளர்களுக்குப் படம்பிடித்துக் காட்டினுர்கள்!

உணவு வெட்டினுல் — மக்கள் படும் துயரத்தை அரசு கொஞ்சமாவது கவனத்துக் கெடுக்கும்—அதன் பயனுக வரவுசெலவுத் திட்டத்தில் மக்களின் பசிப்பிணியைத் தீர்க்கக்கூடிய முறையில் ஏதாவது திட்டம் இருக்கும் என்று பலர் எதிர்பார்த்தார்கள்.

ஆனுல்— என். எம். பெரேராவின் புதிய வரவுசெலவுத் திட்டத்தில் மக்களின் உணவுக் கஷ்டத்தை தீர்ப்பதற்கு பட்டினிச்சாவுகளை தடுப்பதற்கு—எந்தவித ஆறுதலும் தரப்படவில்லை.

மாருக— உழையுங்கள் என்ற உபதேசமே காணக் கிடைக்கிறது!

உழைப்பதற்கு மக்கள்— தொழிலாளிகள் என்றும் தயார். அவர்கள் 'சிகரெட்' பிடித்துக்கொண்டு— கோட்டும் சூட்டுமாக ''டிப்டாப்பாக'' வாழவில்லை. உழைத்துக்கொண்டுதான் இருக்கிருர்கள் ஆனுல் உழைப்பதற்கு அவர்கள் உண்ண வேண்டும். சாப்பிட்டால் தான் உழைப்பதற்கு ஏற்ற சக்தி அவர்கள் உடம்பில் ஏறமுடியும்!

போதியஉணவைக்கொடுக்காமல் உழையுங்கள் என்ருல் எப்படி உழைக்கமுடியும்?

உழைப்பதற்கு வருகிருன் ஒரு தொழிலாளி — அரைப் பட்டினியுடன்! அவன் உழைத்துக்கொண்டிருக்கும் போது—அவன் மனம் வீட்டில் பட்டினியாகக் கிடக்கும் தன் மனைவி மக்களையே சுற்றிவரும்—அதனுல் அவனுல் முழு சக்தியுடன் உழைக்கவும் முடியாது; உழைப்பு சக்தியும் பாதிக்கப்படும்!

மக்களின் இன்னல்களை— பார்த்த பின்னராவது உணவுப் பொருட்களை வழங்க புதிய பட்ஜட்டின்மூலம் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

தங்கமூளை என். எம். பெரேரா தந்திரமாக ஒரு மாதத்துக்கு முன்னரே அத்தியாவசிய உணவுப்பொருட்களில் கைவைத்துவிட்டு— புதிய பட்ஜட்டில் அவற்றின் விலையில் மாற்றமில்லாது விட்டிருப்பதுடன் 'சிகரெட்'டின்விலையைமட்டும்ஒருசதத்தால்குறைத்திருக்கிருர்!

உணவு பொருட்களின் விலையைக்குறைப்பார் என்று எதிர்பார்த்திருந்த மக்களுக்கு சிகரெட் விலையை ஒரு சதம் குறைத்ததால் எந்த வித பயனும் ஏற்படப் போவதில்லை!

சிகரெட்டை குடித்துக் கொண்டு ஒருவன் உயிர்வாழ முடியுமா?

துணிகளின் விலையைக் குறைக்கநடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதே வரவுசெலவுத்திட்டத்தில் பாராட்டப்படவேண்டிய ஒரே ஒரு அம்சமாகும். ஆனுல், உணவுக்குப் பின்னர்தான், உடைப் பிரச்சினை. துணிகளின் விலையை குறைத்ததைவிட, உணவு பொருட்களின் விலையை குறைத்திருந்தால் — உணவுப் பொருள் தட்டுப்பாட்டை நீக்க அற்பசொற்பமாவது நடவடிக்கையெடுத்திருந்தால் மக்களின் சஞ்சலம் கொஞ்சமாவது நீங்கியிருக்கும்!

புதிய வரவுசெலவுத்திட்டம்— சம்பிரதாயபூர்வமாக அரங்கேற்றப்பட்டுவிட்டது. இனி நாளிலும், பொழுதிலும் அடுத்தடுத்து 'கஸெட்' மூலம் என்னென்ன கழுத்தறுப்பு நடைபெறப்போகிறதோ போகப்போகத்தான் புரியும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலுக்குப் போதிப்பது நீதி இலங்கைத் தமிழருக்கோ அநீதி!

இஸ்ரேலின் ஆக்கிரமிப்பைக் கண்டித்து இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க ஆழ்ந்த கவலை தெரிவித்ததுடன் இஸ்ரேலியர் கைப்பற்றி வைத்துள்ள அரபுப் பிரதேசங்களிலிருந்து உடனடியாக அவர்கள் வெளியேற வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

இஸ்ரேலியர் கைப்பற்றிய அரபுப் பிரதேசங்களை இஸ்ரேலியர் இஸ்ரேலியப் பிரதேசங்கள் ஆக்குவதற்கு அப்பகுதிலுள்ள அரபு மக்களை பெருங்கஷ்டத்துக்குள்ளாக்கினர் என்றும், இஸ்ரேலியர் கைப்பற்றிய பிரதேசங்களை அவைகளின் சொந்தக்காரர்களிடமே திருப்பிக்கொடுக்க வேண்டுமெனவும், இதுவரை இஸ்ரேலியர் மேற்கொண்டு வந்த நடவடிக்கைகள் அமைதியையும் சமாதானத்தையும் அவர்கள் விரும்பவில்லைஎன்பதையே காட்டுகிறதுஎனவும்இலங்கைப் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்—

(ஆதாரம் ஈழநாடு 11-10-73)

### மனச்சாட்சி மலருமா?

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் பிரதேசம் என்பதை இலங்கையின் சரித்திரத்தை படித்த எவரும் ஏற்றுக் கொள்வர், சிற்சில காலங்களில் அநுராதபுரி, பொல்லநறுவைப் பகுதிகளைத் தமிழ் மன்னர்கள் ஆண்ட போதிலும் அவை தமிழ் பிரதேசங்கள் என தமிழர்கள் சொல்லவில்லை. ஆனால் சிங்கள மன்னர்கள் சில காலங்களில் தமிழ் பகுதியை ஆண்டதினால் தமிழ் பிரதேசமான வடக்கு கிழக்கு மாகாணங்கள் சிங்களப் பிரதேசமாக மாறிவிடாது. கலை, கலாசாரம், மொழி, உணவு கடவுள் வழிபாடு, இவைகளில் கூட தமிழ்ப் பிரதேசம் தன்னுதிக்கத்தைப்பெற்றிருந்தது சிங்கள மக்களின் கலை, கலாச்சார மொழி, உணவு கடவுள் வழிபாடு சில மாற்றங்களைக் கொண்டதாகவே இருந்தது.

### தமிழர்களின் தனி இராச்சியங்கள்

சிப்பை மறைத்துக் கல்யாணங்கள் நின்று விடுவதில்லை. சரித்திரத்தை மறைக்கலாம். மாற்றியும் எழுதிப்பார்க்கலாம், ஆனல் பிரதேசத்தில் பரம் பரையாக தொடர்ந்து வாழ்ந்து வரும் மக்கள்—மன நிலையை எழுச்சியை, பழைய சரித்திரத்தை மறந்துவிட மாட்டார்கள்; திருமலையில் குளக்கோட்டன் யாழ்ப்பாணத்தில், சங்கிலி மன்னன், வன்னியில் பண்டாரவன்னியன், இவர்கள் எல்லோரும் நாடு காப்பதற்கு போரிட்டு எதிரியிடம் மண்டியிட மறுத்து மறைந்த அரசர்களாவர், இவர்கள் அரசாண்டது தமிழ் இராச்சியமே!

இந்தத் தமிழ் இராச்சியங்கள் தற்போது சிங்கள ஆட்சியாளரின் ஆக்கிரமிப்பில் இருந்து வருகிறது. இதன் தலைவராக பிரதமராக சிறிமாவோ பண்டார நாயக்க இருந்து வருகிறார்.

### ஆங்கிலேயன் சென்னையில் இருந்தும் இலங்கையை அரசாண்டான்

வெள்ளைக்காரன் வெளியேறிப்போன போது—தமிழர்களின் இராச்சியத்தை பிரித்துக் கொடுத்திருக்க வேண்டும், அல்லது தமிழர்களின் சம்மதம் பெற்று அரசாண்டிருக்கவேண்டும் நிர்வாக வசதிக்காக ஒரு இராச்சியமாக இலங்கை இணைக்கப்பட்டதைச் சாட்டாக வைத்துக்கொண்டு அரபுக்களையும் அவர்கள் நாட்டையும் வைத்திருக்கும் இஸ்ரேலியர் போல் எம்மையும் எமது நாட்டையும் ஒன்றாக இணைத்து வைத்திருப்பது நீதியானதா?

### கல்லோயாவும் அல்லையும் கந்தளாயும்

கல்லோயாவையும் (பட்டிப்பளை) அல்லை கந்தளாயையும் சிங்களப் பிரதேசங்களாக்க சிங்கள அரசு முயற்சித்து ஓரளவு வெற்றியும் பெற்றிருக்கிறது இஸ்ரேலியர்கள் கைப்பற்றிய அரபுப் பிரதேசங்களை எப்படி இஸ்ரேலியப் பகுதிகளாக்கமுயற்சிக்கிறதோ அதைப் போலவே. சிங்கள ஆட்சியினர் கிழ் மாகாணத்தின் மிகநல்ல விளை நிலங்களைத் தமதாக்குவதுடன் தமிழ் மக்களைக் கஷ்டத்துக் குள்ளாக்குகின்றனர்.

### திருகோணமலைக்குப்படை எடுப்பு

திருமலையை எப்படியும் பிடித்து விடவேண்டும் சிங்களத் தொகுதியாக்கிவிட வேண்டும் என்பதற்காக தீவிர சிங்கள குடியேற்றமே ஏிடைபெறுகிறது. பதவியா பகுதியில் தனிச் சிங்களவர்கள், குடியேற்றம், முதலிக்குளம் பகுதியில் அத்துமீறிய குடியேற்றம், அபயபுர, சிறிபுர, இப்படி அத்துமீறும் குடியேற்றம் — இப்படியே தமிழ் நாட்டை விழுங்கிவிட பார்க்கிறது சிங்கள அரசு! எப்படி வரும் அமைதியும் சமாதானமும்?

### சிங்கள நிர்வாக சேவையாளர்கள்

வட கிழக்குப் பகுதிகளுக்கு முக்கியமாக திருமலை, யாழ்ப்பாணம், வவுனியா, போன்ற பகுதிகளுக்கு நிர்வாக சேவைக்கு (அரசாங்க அதிபர்) சிங்களவர்களாகவே அரசு நியமிக்கிறது அவர்கள் தமிழ் தெரிந்தாலும் தமிழில் பேசுவது குறைவு, சிங்களத்தைத் தமிழர்கள் எழுதிப்பார்க்கட்டும் அல்லது ஆங்கிலத்திலே எழுதட்டும் என எமது மொழி தவிர்ந்த ஏனைய மொழிகளை எம்மிடத்தில் செலுத்தப் பார்க்கிறது

### மற்றவர்களுக்கு நீதி சொல்வதும்! தமிழர்களுக்கு அநீதி செய்வதும்!

அரபுப் பிரதேசங்களை இஸ்ரேலியர்கள் இஸ்ரேலியப் பிரதேசமாக மாற்ற முயற்சி செய்வதால் அரபு மக்கள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகிறர்கள். இஸ்ரேலியர் கைப்பற்றிய பிரதேசங்களை அவைகளின் சொந்தக்காரரிடமே திருப்பிக்கொடுக்க வேண்டும். அதேபோல...!

தமிழர்களின் பிரதேசமான பதவியா, கல்லோயா (பட்டிப்பளை) அல்லை, கந்தளாய் பகுதிகளையும் தமிழர்களுக்கே திருப்பிக்கொடுக்க வேண்டும். தமிழ் மக்களை பெரும் கஷ்டத்துக்குள்ளாக்கிய சிங்கள ஆட்சியிலிருந்து தமிழர்களின்இராச்சியத்தை தமிழர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

இலங்கைப் பிரதம மந்திரி இதை ஏற்றுக்கொள்ளாராறல் அவர் இஸ்ரேலுக்குத் தெரிவித்த கண்டனம் நியாயமானதாகும். தவிர்த்து இலங்கைத் தமிழர்களுக்கு அநீதி செய்வதென்றல் இலங்கையும் ஒரு காலத்தில் அரபு நாடுகள் போலவும் இஸ்ரேல் போலவுமாகலாம். அன்று இன்றைய இஸ்ரேலின் பணியை இலங்கைப் பிரதமரே நடத்தியும் வைக்கலாம்.

[illegible] ஒரு நீதியும் இன்னும் தேவையா?

## முத்து—சுப்பிரமணியம்

## வடமுனைக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இது சம்பந்தமாக திரு. தேவநாயகம் அனுப்பியுள்ள தந்தி கூறுவதாவது:—

'தடுக்கப்பட்ட பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட புனைப் பகுதிகளிலுள்ள அரசாங்கக் காணிகளில் பிக்கு ஒருவரின் தலைமையில் பெருந் தொகையானேர் சட்டத்தை மீறி குடியேறியுள்ளனர்.

'வடமுனைக் குடியேற்றத் திட்டத்தின் கீழ் அரசாங்கத்தால் சட்ட பூர்வமாக குடியமர்த்தப்பட்டவர்களை பலவந்தமாக துரத்தப்போவதாக இவர்கள் பயமுறுத்தி வருகிறார்கள்.

'இதனல் பெரும்பரபரப்பு இங்கு ஏற்பட்டுள்ளது. இதனல் குழப்ப நிலை தோன்றலாம்—நாடு முழுவதும் சம்பந்தப்பட்ட இனக்கலவரமாகவும் அது வெடிக்கலாம்.

'இந்தப் பைத்தியக்காரத்தனம் நிறுத்தப்படா விட்டால் உங்கள் உணவுற்பத்தி இயக்கமும் வெறும் கனவாகி விடலாம். ஆகவே இதுவிடயமாக உடன் தலையிட்டு நடவடிக்கையெடுங்கள்—'

# இவர்கள் சைவர்கள்!

அரசாங்கத்தின் நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் தமிழர்களுக்கு பாதிப்பையே ஏற்படுத்தி வருகின்றன இது சிங்கள சோசலிசத்தின் ஒரு தோற்றம்.

ஆனல் நாட்டின் தேசியப் பிரச்சினைகள் கூட தமிழ்பேசும் மக்களைத்தான் சற்றுக் கூடிய வலுவுடன் தாக்குகின்றன. அண்மையில் உணவு விடுதிகள் இரண்டு நாட்களுக்கு அரிசி, மா உணவுவகைகளைப் பரிமாறுவதைக் கட்டுப்படுத்திய அரசாங்கம் வெள்ளி, செவ்வாய் ஆகிய இரு தினங்களையுமே இதற்கெனத் தெரிவு செய்தது.

என்ன நுணுக்கமான தெரிவு!

வெள்ளி, செவ்வாய் தினங்கள் சைவர்களுக்கு விரத நாட்கள் இத்தினங்களில் விரதமிருக்கும் சைவத் தொழிலாளர்கள் அவதிப்படுகின்றார்கள். இப்படியாக இந்த நாட்டில் சைவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் உரிமைகள், சலுகைகளைக் கூட்டிக் கழித்துப் பார்த்தால் இறுதியில் ஒரு சைவர் (zero) தான் வரும்.

இதனல் தான் போலும் இவர்கள் சைவர்கள்.

— [illegible]

## முற்போக்கு...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்ட வினக்களுக்கு விடை பகரக் கடமைப்பட்டுள்ளார்கள். அதன் பின் அவர்கள் கூட்டத்தைக் கூட்டட்டும். பத்திரிகைகளில் பத்தி பத்தியாக விளம்பரம் செய்யட்டும். ஏன் தினகரன் தானே இன்று முற்போக்கு எழுத்தாளர்களுக்கு முண்டு கொடுக்க இருக்கிறது. இதோ எனது கேள்விகள்:-

(1) நீங்கள் ஈழத்து எழுத்தாளர் ஒன்றியம் அமைத்தீர்களே அதன் சாதனைகள் யாவை?

(2) ஆட்சிக்கு வந்த அரசுக்கு ஆலவட்டம் பிடித்துச் சாமரை வீசினீர்களே இன்று நூலை வெளியிட விரும்பும் எழுத்தாளனுக்குக் கடதாசியாயினும் தான் சொந்தப் பணத்தில் வாங்க முடிகிறதா?

(3) எழுத்தாளனுக்கு, நூலை வெளியிட விரும்பும் எழுத்தாளனுக்கு ஏன் முற்போக்கு எழுத்தாளனுக்காயினும் இதுவரை அரசாங்கம் கடன் உதவி வழங்கியதா?

(4) சொந்தப் பணத்தைச் செலவிட்டு நூலை வெளியிட்ட ஒரு சில எழுத்தாளர்களது நூல்களில் ஐந்து பிரதிகளைத்தானும் அரசாங்கம் பணம் கொடுத்து வாங்கியதற்குச் சரித்திரச் சான்றுகள் இருக்கின்றனவா?

(5) ஒன்றியத்தலைவர் கூட தான் வெளியிட்ட வெள்ளியை வெளியிட முடியாமல் மூடுவிழா நடத்தினரா இல்லையா?

(6) கடதாசிக் கோட்டாவை முற்று முழுதாக வெட்டி அச்சகத்தாரை விழிபிதுங்க வைத்திருப்பது எந்த அரசு?

ஒரு நூலை வெளியிட முன்னர் 500 ரூபா தேவையானல் இன்று ரூபா 1,500 வரை வேண்டியிருக்கிறதா இல்லையா?

இவ்வினக்களுக்கு எதிர்மாறன விடையைத்தான் நீங்கள் ஈழத்துத் தமிழ் மக்களுக்கு, வாசகனுக்கு அளிப்பீர்கள். அது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை. ஒன்றியத்தில் இலட்சியங்கள் கைகூடியபின் இத்தகைய முற்போக்கு விழா எடுப்பது தான் முறை. நீங்கள் என்னடாவென்றல் சூடு சொரணையற்று மக்கள் முன் முகம் காட்டி நிற்க முற்படுகிறீர்கள் சீ! வெட்கமாக இல்லையா உங்களுக்கு இப்போது மாரி மழை தொடங்கிவிட்டது. தவளைகளின் தமுக்கடிப்புக்குக் குறைவில்லை. நீங்களும் தமுக்கடித்து விடியவும் வெள்ளைபிரட்டத்தான். உங்கள் சங்கத்தைக் கூட்டுகிறீர்களா? இந்தச் சங்கம் கூடுவதால் ஒன்று தெளிவாகும். அதாவது மீனுக்குத் தலையும் பாம்புக்கு வாலும் காட்டும் எழுத்தாளர் பலரது விலாங்குத் தன்மை சந்திக்குவரும்.

உங்கள் அரசியல் வக்காலத்தும், வங்குரோத்தும் நாடறியும், நாமறிவோம் பராபரமே!

— அப்பலோ

## வட்டுக்கோட்டை 'திமிர்' ஆட்டம்!

வட்டுக்கோட்டைத் தொகுதியில் தியாகராசாவின் திமிர் ஆட்டம் நாள்தோறும் அதிகரித்து வருகிறதாக தொகுதி மக்கள் பேசிக் கொள்ளுகிறார்கள்.

அண்மையில் சில்லாலைப் பாடசாலையில் சிறுகைத் தொழிற் காட்சியொன்றை திறந்து வைக்க தியாகராசா சென்றபோது—சில்லாலையின் தன்மானத் தமிழ்மாணவர்கள் அந்த நிகழ்ச்சியில் பங்குபற்றது பகிஷ்கரித்தனர் 21 பேர் மட்டுமே அதில் பங்கு பற்றினராம்.

மறுநாள் தியாகரின் அடிவருடிகள் அங்கு பேச முற்பட்டபோதும், சில்லாலை மாணவர்கள்கூச்சல்போட்டு அவரைப் பேசவிடாது தடுத்தனர்.

இன்னேர் நாள் பண்டத்தரிப்பு சந்தியால் தியாகராசா சென்றபோது, அவரின் ஆதரவாளர் சிலர் ஐயா என அழைத்ததுகூட அவருக்குப் பிடிக்கவில்லையாம். உடனடியாக பொலிஸ் நிலையம் சென்று தன்னைக் கூக்குரவிட்டு கேலி செய்ததாககூறி பொலீசாருடன் வந்திறங்கினராம்.

அப்போது ஓர் இளைஞர் 'தியாகர்' போகின்றார் என்று கூறிய போது — அதுவும் இவருக்கு கர்ண கடூரமாக கேட்கவே, தியாகர் காரைவிட்டு இறங்கி அவரைத் தேடும் வேளையில் ஈடுபட்டபோது அந்த இளைஞர் ஓடி மறைந்து விட்டாராம். பொலீசார் வருவார்கள்; அவரிடம் அந்த இளைஞரை பிடித்துக்கொடுங்கள் என்று அங்கு நின்றேரிடம் கூறிவிட்டு அங்கிருந்து சென்றராம்.

காரைநகர் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற நவராத்திரி விழாவிலும் திரு. தியாகராசா கலந்துகொண்டு, ரசாபாசமாக நடந்துகொண்டதாக இந்துக் கல்லூரி மாணவர்கள் தெரிவித்தனர்.

## இந்தியத்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வேலையை இழந்திருந்தால், அவர்களுக்கு மீண்டும் வேலை கிடைக்கவும்—இந்த மூன்று பிரிவினையினரையும் வேலையிலிருந்து நீக்குவதைதடுக்கவும்வழிகோலப்பட்டுள்ளது.

(1) இரு நாடுகளில் எந்த நாட்டின் பிரஜையாவதற்கும் விண்ணப்பிக்காமல் நாடற்றவர் என்ற தரத்திலேயே இருப்பவர்கள்—

(2) பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்தும் அது கிடைக்காததால் நாடற்றவர்களாக தொடர்ந்து இருப்பவர்கள்.

(3) இந்தியப் பிரஜாவுரிமை பெற்றும் தங்கள் விசா காலம் முடியும் வரை தங்கியிருப்பவர்கள்.

—ஆகிய இந்த மூன்று பகுதியினரையும் யாரும் வேலை நீக்கம் செய்ய முடியாது.

இதோ மற்றுமோர் சீர்திருத்தப்பெற்ற உன்னத தயாரிப்பு

நியூ மில்க்வைற் சோப்

எங்கும் விற்பனையாகிறது.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
த. பெ. இல. — 77, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா திரும்பும் மலையகத் தமிழர்கள் மண்டபம் முகாமில் அடையும் கொடுமை!

## பண்டிதர் பேசுகிறார்!

### அரிசியும் உமியும்

உரிமைகள் பறிக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு அடக்கப்பட்ட ஓரினம் ஆளுவோரின் -- அடிமையாக்கினோரின் அடிவருடி உரிமை பெற்ற வரலாறு உலகில் இல்லை. அருளம்பலம் கும்பல் அரசாங்கத்தை அண்டிப் பிழைக்கலாம். ஆனால் உரிமை பெற முடியாது.

இருவரில் ஒருவருக்கு அரிசியையும் மற்றையவருக்கு உமியையும் கொடுத்துவிட்டு இருவரையும் சமமாக நடத்துகிறோம் — சமதர்மத்தைக் கடைப்பிடித்திருக்கிறோம் என்று கூறுபவர்களைப் பைத்தியக்காரர்கள் என்றுதானே மக்கள் பழிப்பார்கள். புதிய அரசியல் சாசனத்தில் சிங்களவருக்கு அரிசியும் தமிழருக்கு உமியும் கொடுக்கப்பட்டுள்ளது. சட்டங்களை எல்லாம் சிங்களத்தில் ஆக்கப்படும். அவற்றின் மொழி பெயர்ப்புத்தான் தமிழில் கொடுக்கப்படும் மூலம் அரிசி என்றால் மொழி பெயர்ப்பு உமிதானே! இந்த அரசியல் சாசனத்தை ஏற்றுக் கொண்ட அருளம்பலம் கும்பல் தமிழினத்தை அடிமைகளாக்கும் பணிக்குத்தானே உதவி செய்தார்கள்.

### சிங்கள அபாயம்

கிராமச் சபைச் சட்டங்களும் சிங்களத்தில் ஆக்கப்படும். தமிழில் மொழி பெயர்ப்புக்கிடைக்கும் ஒரு கிராம சபையின் தலைவர் தமிழ் மொழி பெயர்ப்பை வாசித்துக் கருத்துரை வழங்கும் போது அக்கிராமச் சபை உறுப்பினர் ஒருவர் எழுந்து தமிழ் மொழி பெயர்ப்புப் பிழையானது; மூலத்தில் சிங்களச் சட்டத்தில் வேறு கருத்து உள்ளது என்று ஆட்சேபித்தால் அந்தத் தலைவர் சிங்களப் புலவரிடம் ஓடிப் போய்த்தான் உதவி பெறவேண்டும். இது மட்டுமா! வருங்காலத் தமிழ் வழக்கறிஞர்கள் சிங்களத்தில் புலமை பெறாமல் சிறந்த வழக்கறிஞர்களாக வாதிட முடியாதே!

### சனநாயகத்துக்கு தலையடி!

முப்பத்தைந்து லட்சம் தமிழ் பேசும் மக்களின் இறைமையை—வாக்குரிமையை இந்தச் சிங்கள ஏகாதிபத்தியம் அவமதித்துள்ளது. இம்மக்களால் தெரிவு செய்யப்பட்ட எந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினரையும் இந்த அரசாங்கம் அமைச்சரவைக்கு நியமிக்கவில்லை. இதுமட்டுமா? ஒரு சிங்கள அம்மையாரினால் நியமிக்கப்பட்ட ஒரு முஸ்லிமும் ஒரு தமிழரும் இன்று சிறுபான்மை இனத்தினரின் சார்பில் மந்திரி சபையில் இருக்கின்றார்களாம்! என்ன வேடிக்கை! இந்த அரசாங்கத்தின் விநோதச் செயல் சிறுபான்மை இனத்துக்கு ஏன் சனநாயகத்துக்குக் கொடுக்கப்பட்ட தலையடிதானே!

### மதவெறி

புதிய அரசியல் அமைப்பில் ஒரே ஒரு சமயத்தின் பெயர் தான் பொறிக்கப்பட்டுள்ளது. இந்த நாட்டவரின் சமயங்களாகிய பௌத்தம், சைவம், கிறித்தவம் இஸ்லாம் எனும் நான்கு சமயங்களில் பௌத்தம் மட்டும் அரசியல் மதம் என்று கூறாமல் கூறப்பட்டுள்ளது. ஏனைய மூன்று மதங்களின் பேரைக் கூட அரசியல் அமைப்புச் சட்டத்தில் வரைதற்கு இந்த அரசாங்கம் மறுத்துவிட்டது. அரசாங்கத்தை அண்டி வாழும் நியமன அங்கத்தவர் திரு. அசீஸ் அரசியல் நிர்ணய சபையில் இந்த மூன்று சமயங்களின் பெயரையும் குறிக்கும் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தார். எங்களுடைய திருத்தத்தை மட்டுமன்றி அவருடைய திருத்தத்தையும் ஏற்க மறுத்து விட்டது இந்தப் பௌத்த சிங்கள ஏகாதிபத்தியம்.

### ஆங்கில ஏகாதிபத்தியத்திலும் இது ஆபத்தானது.

ஆங்கில ஏகாதிபத்திய காலத்தில் - நூறாண்டுகளுக்கு முன் — ஒரு விதானையாருக்குக் கொடுக்கப்பட்ட நியமனப் பத்திரத்தைப் பார்த்தேன். அப்பொழுது ஆங்கிலம் உத்தியோக மொழி. தமிழும் சிங்களமும் அடிமை மொழிகள். எனினும அந்த நியமனப்பத்திரம் ஆங்கிலத்தில் மட்டுமன்றித் தமிழிலும் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழில் மொழி பெயர்ப்பன்று. வெள்ளைக்கார அரசாங்க அதிபர் ஆங்கிலப் பகுதிக்கும் தமிழ் பகுதிக்கும் தனித்தனி கையொப்பமிட்டிருக்கிறார். இப்பொழுது சிங்கள ஏகாதிபத்தியம் நியமனக் கடிதங்களை என்ன மொழியில் கொடுக்கிறது? தனிச் சிங்களத்தில் தானே, ஆங்கில ஏகாதிபத்தியத்திலும் சிங்கள ஏகாதிபத்தியம் கொடுமையானது என்பதை ஆயிரம் அருளம்பலம் தியாகராசா துரையப்பாக்கள் மறுக்க முடியுமா?

ஆங்கில ஏகாதிபத்தியம் விதானைமாரை, உடையார்மாரை, தமிழ் மொழி மூலம் நியமனம் பெற்ற உத்தியோகத்தர்களை ஆங்கிலம் படிக்கும்படி நெருக்கவில்லை-படிக்காதவர்களை வேலையினின்று நீக்கவில்லை. பௌத்த சிங்கள ஏகாதிபத்தியம் இப்பொழுது சிங்களத்தில் சித்தியடையவில்லை என்று எத்தனையோ கிராம சேவையாளரையும் சிற்றூழியர்களையும் வேலையினின்று நீக்கிவிட்டது. எனவே நெஞ்சைத்தொட்டுச் சொல்லுமாறு இந்தச் சிங்கள ஏகாதிபத்தியத்தின் அடிவருடிக் கும்பலைக் கேட்கிறோம். ஆங்கில ஏகாதிபத்தியத்திலும் சிங்கள ஏகாதிபத்தியம் தமிழருக்குப் பெருங்கொடுமைகளைச் செய்கிறதென்பதை ஏற்றுக்கொள்ளுவீர்களா? இனி மேலாகுதல் மனச்சாட்சியை விற்றுப் பிழைக்காதீர்கள். உரிமைகளைப் பெறுதற்கு எங்களுடன் ஒன்றுபட்டுப் போராடுங்கள்.

(காவலூர் பா. உ. பண்டிதர் இரத்தினம் உண்ணாவிரதக் கருத்தரங்குகளில் கூறியகருத்துக்களின் திரட்டு.)

## இரக்கமற்ற அதிகாரிகளால் சுரண்டப்படும் அக்கிரமம்!

### இ. தொ. கழகப் பிரமுகருக்கு முகாமிலிருந்து வந்த கடிதம்!

சிறிமா-சாத்திரி ஒப்பந்தத்தின்கீழ் இந்தியப் பிரஜாவுரிமைபெற்று தமிழ் நாட்டுக்கு செல்வோர் மண்டபம் முகாமில் வைத்து அதிகாரிகளால் எவ்வளவு தூரம் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள்என்பதை தமிழ் நாட்டுக்குத் திரும்பி மண்டபம் முகாமில் தங்கியிருக்கும் ஒருவர் இராகலை மாவட்ட இ. தொ. கழக உபதலைவர் திரு. பி. காந்தி அவர்களுக்கு எழுதியுள்ள பின்வரும் கடிதம் விளக்கும். இதை அவரது விருப்பத்துக்கமைய சகலரும் அறிவதற்காக சுதந்திரனில் பிரசுரிக்கிறோம்:-

வாழவழியின்றி அன்று கடல் கடந்த தமிழர்கள் இன்று புனர் வாழ்வைத் தேடி தமிழகம் திரும்புகின்றனர்.

தமிழன்னை உளம் பூரித்து அவர்களை கரம் நீட்டி வரவேற்கக் காத்திருக்கின்றாள் என்று எண்ணி தமிழகத்தை நோக்கி புறப்பட்டு வந்துவிட்டார்கள்.

இன்று தாயகம் திரும்பும் மக்களுக்கு உதவி செய்கின்ற வகையில்; அவர்களுக்கு தேவையானதகவல்களையோ இன்னபிற தேவைகளையோ முதலில் நிறைவேற்றி வைக்காமல் இராமேஸ்வரத்தில் இருக்கும் கஸ்டம்ஸ் அதிகாரிகள் இவர்களிடம் முதலில் கேட்பது சோப்பு, சட்டை, டார்ச்லைட்!

புனர்வாழ்வில் அடிவைத்து மண்டபம் முகாமுக்கு வரும் தமிழர்கள் இரவு 12 மணி புகை வண்டி மூலம் மண்டபமுகாம் வரும்போது பிரயாண களைப்பால் நித்திரையின்றிவரும் இவர்கள், வண்டியில் தன்னை மறந்து நித்திரை செய்கின்றார்கள். இவர்களில் கன்னி பெண்களின் கைகளை பிடித்து இழுப்பதும், பொருட்களைசூறையாடுவதுமேவேலையாக செய்துவருகின்றனர். தனித்துணைக் கலெக்டர் ஆபீஸ்களிலும் பல தில்லுமுல்லுகள் நடைபெறுகின்றன; தமிழ் நாட்டுக்கு வந்து இக்கெதியா? என்று மனம் வெறுத்து, பயந்து மக்கள் ஒரு உதவியும் வேண்டாம் என்று மானத்தையும், கற்பையும் காப்பாற்றிக் கொள்ள ஊர்களுக்கு சென்றுவிடுகிறார்கள்.

புனர்வாழ்வு உதவிக்காக மண்டப முகாமில் தங்கி உள்ளவர்களின் நிலைமைகளை கண்டு கேட்டபோது, இவர்களை இலங்கையிலுள்ள இந்திய தூதுவராலயத்தால் தெரிவுசெய்யப்பட்ட இடத்தில் இடமில்லை என்று கூறி பல மாதங்கள் முகாமில் தங்கவைக்கின்றார்கள். அதே இடத்திற்கு பணம் கொடுத் [illegible] சந்திக்க சென்றால் அவர்களுடைய பியோனுக்கும் பணம் கொடுக்கவேண்டும். இவர்களை மனிதன் என்று மதிப்பதில்லை. மிருகம் என்று வாய்விட்டு சொல்லமுடியாத வார்த்தைகளால் திட்டுகின்றார்கள்.

மேலும் எங்கள் குடும்பங்களுக்கு தங்குகின்ற காலத்தில் கொடுக்கப்படுகின்ற சாப்பாடு பணத்தில் ஐந்து, பத்து, எடுத்துகொள்ளுகிறார்கள். நாங்கள் விசயம் தெரிந்து பணத்தை திருப்பி கேட்டால் அவ்வளவுதான் பணம். தாசில்தாருடன் கேட்டால் இங்குள்ள கிளார்க்குகள் வாட்சிமேனை விட்டு அறையில் இருக்கும் 'பலுப்பை,' கழட்டிக் கொண்டுபோய்விடுகிறார்கள். இந்த பணத்தை கேட்காதே என்று எங்களை பயமுறுத்துகிறார்கள்.

கடன் உதவிக்காக விண்ணப்ப பத்திரத்தை நிரப்புவதற்கு ரெவ்வெனியு இன்ஸ்பெக்டர் அவர்களுடைய வீட்டுக்கு இரவுசெல்லவேண்டும். ஒரு விண்ணப்பபத்திரத்தில் நிரப்புவதற்கு ரூபா 10/- நிரப்பி முடிந்தவுடன் பணம் வந்ததும் ரூபா50/- கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் போகும்போது பொருட்களை 'லக்கேஜ்' பண்ணும்போது வாச்சிமேன் சிலவற்றை பறித்துகொள்ளுகின்றார் இதை யாரிடமும் முறையிடமுடியாத அளவுக்கு தடுமாறுகின்றனர்.

எங்களுக்கு கொடுக்கப்படும் அறையில் லைட் 'பல்ப்' இல்லை என்று வாட்சிமேனை அணுகினால் ஒரு பல்ப்புக்கு ரூபா 5/ வாங்குகின்றார்கள். வாட்சிமேன், கிளாக், ரெவ்னியு இன்ஸ்பெக்டர், இவர்கள் எங்களை ஊருக்கு அனுப்புகின்ற நேரத்தில் ரூபா 10/20, கொடுக்காவிட்டால் உன் குடும்பத்தை அனுப்ப மாட்டோம் காசு கொடுக்கின்ற குடும்பத்தைதான் அனுப்புவோம் என்றும்தேங்காய் எண்ணெய் டின், சோப்பு கட்டிகள் சூட்கேஸ் ஆகிய பொருட்கள் வைத்திருப்பதை பார்த்தால் கட்டாயமாக தரல் வேண்டும். இல்லாவிட்டால் இங்கு இருந்துசாகவேண்டும் என்று பயமுறுத்துகிறார்கள். உதவி கேட்டு ஆபீஸ் பக்கம் சென்றால் வெளியேஉட்காரமுடியவில்லை. நாய்களை விரட்டுவது போல் விரட்டுகின்றார்கள்.

நாங்கள் அகதிகளாகவும் இந்த நாட்டைப் பற்றி சரியாக தெரியாதவர்களாகவும் இருப்பதால் நேரடியாக அந்த கிளார்க்கை எதிர்க்கவோ கலெக்ட்ரிடம் முறையிடவோ பயமாக இருக்கிறது. எங்களின் சொந்தக் காரர்கள் பலர், இதற்கு முன்பு வேலைப்பார்த்தவர்கள் இவ்வாறு பேசியது கிடையாது என்றுஎல்லாரும் கூறுகின்றார்கள்.

## பட்டிதொட்டி...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

துடித்தபோதும் ஐம்பதாவது நாளன்றே சந்தர்ப்பமளிக்கப்பட்டிருப்பதால் பொறுமையுடன் காத்திருக்கின்றனர்.

ஆட்சியினர் தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்க மறுத்து எம்மைக் கேவலப்படுத்தியதாலேயே தமிழர் கூட்டணி சட்டமறுப்பு நடவடிக்கைகளில் இறங்கியுள்ள இந்த வேளையில், 'அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்திச் சமரசம் காண்பதற்கு முயலாமல் தமிழ்த் தலைவர்கள் மக்களை அழிவுப் பாதைக்கு இழுத்துச் செல்கின்றன'ரென்ற அரசாங்க வால்பிடிப் பத்திரிகைகள் சிலவற்றின் ஒப்பாரியை நினைக்கையில் வேடிக்கையாயிருக்கின்றது; தமிழ்த் தலைவர்கள் பேச்சுவார்த்தைக்கு எப்போது மறுத்தார்கள்? சமரசமாகப் பிரச்சினைகட்குத் தீர்வுகாண அடிக்கடி முயன்று அரசினரால் உதாசீனம் செய்யப்பட்டு இயலாத கட்டத்திலேயே தமிழ் மக்கள் போராடத் தயாராகியுள்ளனர். காங்கேசன் துறை இடைத் தேர்தலை இழுத்தடித்துக்கொண்டு சர்வாதிகாரப் போக்கில் சனநாயகத்துக்கே சாவுமணியடிக்கும் இந்த ஆட்சியினர் தமிழ் மக்களின் உரிமைகளைத் தருவார்களென்பது என்ன நிச்சயம்.

அரசு மென்மேலும் தமிழர்களுக்குத் தீங்கிழைத்தால் தமிழர் கூட்டணியும் தமிழ் இளைஞர் பேரவையும் தமிழ் மக்களின் பேராதரவுடன் தீவிரமாகவே இயங்குமென்று எதிர்பார்க்கின்றோம். தமிழர் வாழ்வு சிறக்கத் தனிநாடு காண்போம்! இதுவே எமது இதய கீதமாகட்டும்!

## தோட்டத்தொழி..

(2ம் பக்கத் தொடர்ச்சி)

நாம் இன்னும் மறப்பதற்கில்லை. இதேவேளையில் பயங்கர வாத இயக்கத்தின்போது மலைநாட்டில் பொலிஸ் நிலையங்களைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டதோட்டத் தொழிலாளர்கள் தோளுக்கு தோள் நின்று பொலிஸ் நிலையங்களை காப்பாற்றியது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பொலிஸ் நிலையங்களை காப்பாற்ற சேவை செய்த தொழிலாளர்களை பொலிசார் துன்புறுத்தி வருவது வேதனைக்குரியது. குறிப்பாக இராகலையில் அடித்து கொலை செய்த செயல் ஆழ்ந்த கவலைக்குரியது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பட்டிதொட்டியெங்கும் எழுச்சியையூட்டியது

# தமிழ் இளைஞர் பேரவையின் உண்ணாவிரதம்!

## தனியரசு காணுமட்டும் தமிழினமே போராடு!

தமிழ் இளைஞர் பேரவையினரின் அஞ்சல் ஓட்டம் போன்ற உண்ணாவிரதம் தமிழ் மக்களிடையே பெரும் பரபரப்பை — எழுச்சியை யூட்டியிருப்பதைக் காணும்போது பெருமகிழ்ச்சியாயிருக்கின்றது. ஒவ்வொரு இடங்களிலும் உண்ணாவிரதம் முடிவுறும்போது நடைபெற்ற கருத்தரங்குகள் மூலம், பாமரமக்கள் கூட புத்துணர்ச்சிபெற்று விழிப்படையும் வகையில் பிரச்சாரம்—(அதாவது அரசினரின் மாற்றுந்தாய் மனப்பான்மை பற்றியும், தமிழர் உரிமைகளின்றித் தவிப்பது பற்றியும்) செய்யப்பட்டதை பாராட்டாமல் இருக்கமுடியாது. இதனால் பட்டிதொட்டிகளெங்கணும் தமிழரின் அவலநிலையை நன்கு எடுத்தியம்ப முடிகின்றது.

### துணிவு

அரசின் பாரபட்சமான கொடுமைகளினால் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழினத்தின் மானங்காக்கும் இந்த அறப்போரில் குதித்த இளைஞர்களின் உரிமை வேட்கையை எந்தவித சக்திகளாலும் அழிக்கமுடியாது என்பதை வீரங்கலந்த உறுதியான நம்பிக்கையொளி வீசும் எமது அருந்தமிழ்க் காளையரின் ஒவ்வொரு செயலிலும் காண முடிகின்றது.

அல்லலுற்று ஆற்றாது கண்ணீர் வடிக்கும் எந்தமிழனையின் துயர்போக்க இலட்சக்கணக்கான தமிழர்கள் துணிந்துவிட்டார்களென்பதை உண்ணாவிரதத்தில் கலந்துகொண்ட வீரர்களின் துணிவும், உண்ணாவிரதமிருப்போரைச் சுற்றிநின்ற ஏராளமான ஆதரவாளர்களின் (பெண்களுட்பட) உற்சாகமும் நன்கு படம்பிடித்துக்காட்டுகின்றன.

'தமிழ் இளைஞர் பேரவை'யினரின் இந்த உண்ணாவிரதம்பற்றி ஆரம்பத்திற் கேலி செய்தவர்கள் கூட இன்று மூக்கில் விரலை வைக்கு மளவிற்கு மிகமிக வெற்றிகரமாக நடைபெற்று முடிந்த மாண்பினை என்னவென்பேன்!

"ஆயுதப்போராட்டமானாலும் சரி — வேறு எந்தவிதமான போராட்டத்துக்கு மேற்ற வகையில் மக்களிடையே மனப்பக்குவத்தை — ஆயத்தநிலையை - எழுச்சியையூட்டுவதற்கு இத்தகைய தம்மைத்தாமே வருத்திக்கொள்ளும் அகிம்சைப்போர் சிறந்த மருந்து" என்பதைத் துடிதுடிப்பும் அவசரபுத்தியும் கொண்டவர்களே உணரும் வகையில் உண்ணாவிரதம் உற்சாகத்தையூட்டி வருகின்றது.

### மகிமை

புதிய உத்வேகத்தை யூட்டும் தெம்பினை இளைஞர்களின் இந்த உண்ணாவிரதம் மூலம் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் பெற்றிருக்கின்றனரென்பதைக் கண்டு நெஞ்சம் பூரிக்கின்றேன். "நிராயுதபாணிகளான எம்மால், சீனாவிலிருந்து ஆயுதங்களைத் தருவித்து வைத்துக் கொண்டு ஆணவம் பேசும் சர்வாதிகார ஆட்சியினரை எதிர்த்து உரிமை பெற முடியுமா?" என்று தன்னம்பிக்கையற்ற முறையில் கேள்வி தொடுத்தவர்களே, "எம்மால் தனிநாடு காணமுடியும்; வெகு சீக்கிரமே இது ஈடேறும்!" என்று நம்பிக்கை தொனிக்கப் பேசுகின்றனரென்றால் உண்ணாவிரதத்தின் மகிமையைப்பற்றிக்கூறவும் வேண்டுமோ?

வெளிநாடுகளிலுள்ள பத்திரிகைகளும் இவ்வுண்ணாவிரதம்பற்றி எழுதி வருவதால், ஈழத்தமிழரின் அவலம் உலகமெங்கணும் நன்கு தெரியவரும். ஏற்கெனவே எமக்காகத் துடித்துக்கொண்டிருக்கும் வெளிநாட்டுத்தமிழர்கள். இளைஞர்களின் — புதுத்தலைமுறையினரின் மனக்குமுறலைப் பிரதிபலிக்கும் நோன்பினையெண்ணி இன்னும் அதிகமாகத் துடித்து எமக்காக இடைவிடாது — எமக்கு வெற்றி கிட்டும்வரை குரலெழுப்புவார்களென்பது வெள்ளிடைமலை!

சிறிமா ஆட்சியின் எந்தவிதமான மிரட்டல்களும் — அடக்கு முறைகளும் எம்மை பணிய வைக்க மாட்டாது. வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்கள் எமக்காகக் குரலெழுப்புவதுகண்டு சிங்கள பௌத்தச் சர்வாதிகாரம் ஆத்திரப்படுவதாகத் தெரிகின்றது. இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் பறிபோவது கண்டு வெளிநாட்டுத் தமிழர்கள் வாளாவிருக்க அவர்களெல்லாம் ஊமையரா? — செவிடர்களா? தானுடா விட்டாலும் தன் தசையாடுமென்பதை ஆட்சியினர் புரிந்திட வேண்டும் நன்கு!

### மலரரசி

### கண்ணதாசன்

கவியரசு கண்ணதாசன் அவர்கள் தலைமையிலே இலங்கை அரசினரால் தமிழர் கொடுமைப்படுத்தப்படுவதுபற்றிக் கண்டனக் குரலெழுப்பப்பட்ட தென்பதற்காக அவரின் பாடல்களை இலங்கை வானொலியில் ஒலிபரப்புதற்கும் தடை வந்திருக்கின்றது அதிகாரவர்க்கத்தினரிடமிருந்து. இதையெண்ணும் போது சிரிப்புச்சிரிப்பாக வருகின்றது. ஆணவம் நிறைந்த இந்த மிரட்டலுக்குக் கவிஞர் கண்ணதாசன் அவர்கள் அஞ்சப்போவதுமில்லை; எமக்காகக் குரலெழுப்புவதை நிறுத்தப்போவதுமில்லை. இவ்வீனதனமான மிரட்டலால், 'இலங்கைத் தமிழர்கள் எங்ஙனமெல்லாம் பாதிக்கப்படுகின்றனர் — பழி — வாங்கப் படுகின்றனரென்பதைக் கண்ணதாசன் மட்டுமன்று, உலகமே நன்கு புரிந்து கொள்ளும், பழிவாங்குவதில் தாங்கள் கெட்டிக்காரர்கள் என எண்ணிக் கொண்டிருப்போருக்கு எனது அனுதாபங்கள்!

### உணர்வினால் ஒருவர்

கவிஞர் அவர்களின் பாடல்களை இலங்கை வானொலி ஒலிபரப்பா விட்டால் எமக்கொன்றும் நட்டமில்லை. இலங்கை வானொலியின் நிகழ்ச்சிகளை யார் கேட்கிறார்கள் விரும்பி? பேரிரைச்சல் போட்டு முக்கி முனங்கும் இலங்கை வானொலியின் தமிழ் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து கேட்கும் சக்தி எவருக்குமில்லை. (ஆனால் இலங்கை வானொலியின் சிங்கள ஒலிபரப்பின் சிங்கள நிகழ்ச்சிகளோ காதை செவிடாக்கும் ஓசையுடன் தெளிவாகக் கேட்கின்றன. இலங்கை வானொலி கூடத் தமிழைப் புறக்கணிக்கும் கொடுமை அரசினரின் பாரபட்சத்தாலென்பதை அனைவரும் அறிவர்.) மேலும், அரசின் துதிபாடும் கருவியான இலங்கை வானொலியின் எமது மதிப்புக்குரிய கவிஞரொருவரின் பாடல்களைத் தடைசெய்தது பெருமைக்குரிய விடயமன்றோ? இதனால் தமிழர்கள் எதுவித கவலையுமடையவில்லையென்பதை ஆட்சியினர் அறிந்து கொள்ள வேண்டும். 'உங்கள் பழிவாங்கும் படலம் விரிவடைய விரிவடைய எமது மொழியினவுணர்வு — உரிமை பெறும் வேட்கை மென்மேலும் விரிவடையும்' என்பதனைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன் ஆளவந்தார் கூட்டத்துக்கு. வெளிநாட்டுத் தமிழர்கள் உடலால் வேறுபட்டிருக்கலாமேயொழிய இரத்தத்தால்-உணர்வால் எம்மோடு ஒன்றுபட்டவர்களென்பதையும் ஆட்சிபீடத்தினர் உணர வேண்டும்.

### போராட இளைஞர் படை தயார்!

இலங்கையின் சர்வாதிகாரம் எத்தனையோ விதங்களால் எம்மைப் பயமுறுத்தியும் எதிர்பார்த்த பலனையடையவேயில்லை. தமிழுக்காக குரலெழுப்பிய எமது அருமை இளைஞர்களைச் சிறையிலே போட்டு வாட்டி வதைத்துச் சித்திரவதைப் படுத்துகின்றது; தமிழுணர்ச்சி நிறைந்த அரசாங்க உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்து கஷ்டமான பிரதேசங்களுக்கு அனுப்பிக் கொடுமைப்படுத்துகின்றது; சிங்களத் தேர்ச்சியில்லையென்று சொல்லித் தமிழர்கள் பலரை வேலை நீக்கம் செய்கின்றது; தமிழர் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றம் நிகழ்த்தித் தமிழர்களுக்குத் தொல்லை கொடுக்கின்றது; இராணுவ — பொலீஸ் படைகளில் அதிகாரிகளாகச் சிங்களவரை நியமித்துத் தன் ஆணவத்துக்குப் பக்கபலம் சேர்க்கின்றது. இன்னும் எவ்வளவோ சொல்லொணாக் கொடுமைகளைச் செய்தும் தமிழினம் பயந்து பணிந்து மூலையில் ஒதுங்கி விட்டதா என்றால் அதுதான் இல்லை! அரசினரின் அடக்குமுறையால் கொதித்தெழுந்து உரிமைக்காகப் போராடத் தயாராகி விட்டது இளந் தமிழர் கூட்டம்! உண்ணாவிரதத்திற் கலந்து கொண்ட இளைஞர்களின் திடமான — தியாக மனப்பான்மை அவர்களின் தீர்க்கமான முடிவைப் பறைசாற்றுகின்றது.

தமிழின விடுதலையே நோக்காக எதற்கும் துணிந்துவிட்ட இளைஞர்களை இனி எவராலும் அடக்கமுடியாது இளைஞர்கள் மட்டுமன்று, கிழவர், பெண்கள், குழந்தைகளை அனைவருமே திரண்டு விட்டனர் போர்களம் காண புதிய பாதை வகுக்க!

### பெண்களும் தயார்

ஆண்களுக்குச் சமதையாகப் பெண்குலமும் போராடத் துணிந்து விட்டதென்பதை நான் கூறத்தேவையில்லை. தமிழர் கூட்டணியினரால் நடாத்தப்படவிருக்கின்ற அரசுக்கெதிரான சகல நடவடிக்கைகளிலும் பெண்களும் கலந்து கொள்ளவிருக்கின்றனர். தமிழ் இளைஞர் பேரவையின் உண்ணாவிரதத்தின் கடைசி நாளன்று பெண்களும் ஏராளமாகக் கலந்து கொள்வதென்பது இப்போது முதற்கொண்டே புரிகின்றது. ஏற்கெனவே பெண்கள் பலரும் உண்ணாவிரதமிருக்கத்

(6-ம் பக்கம் பார்க்க)

## புதிய அரசியல்சாசனம் கிழித்தெறியப்படும்வரை தமிழினத்தின் உரிமைப் போராட்டம் நீடிக்கும்!

இளைஞர் பேரவையின் 41 வது நாள் உண்ணாவிரதம் வவுனியா மாவட்டத்தில் முல்லைத்தீவில் நிகழ்ந்தது. இதற்கு வவுனியா பாராளுமன்ற உறுப்பினர் செல்லத்தம்பு தலைமை வகித்தார். அடாது மழை பெய்தாலும் விடாது உண்ணாவிரதத்தை நடத்த முல்லைத்தீவு இளைஞர்கள் முன்னின்றபோது முல்லைத்தீவின் கொடைவள்ளலும் — பட்டினசபை தலைவருமான எம். எஸ். பஸ்தியாம்பிள்ளை அவர்கள் தன்னால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஓர் கட்டிடத்தை தந்து உதவினர்.

21-10-73 அன்று மாலை 6 மணியளவில் உண்ணாவிரதம் சுமார் 75 பேருடன் கருத்தரங்குடன் ஆரம்பமாகியது. அதற்கு திரு. செல்லத்தம்பு தலைமைவகித்து பேசுகையில் கூறியதாவது:-

இந்த அரசு பதவிக்குவந்த வேளையில் ஈழத்தமிழர் தலைவன் தந்தை செல்வா கூறினர் தமிழர்களை கடவுள் தான் காப்பாற்றவேண்டும் என்று. இக்கூற்றை அன்று நையாண்டி செய்தோர் இன்றைக்கு தங்கள் அரச பதவிகளைக் காப்பாற்ற கடவுளை வணங்குகிறார்கள். சமய தலைவர்களை அழைத்து அறிக்கைகள் வேறு விடுகிறார்கள்.

இளைஞர்கள் தலைவர்களது சொற்படி நடக்கவேண்டும், எவ்வித முன்னறிவித்தலுமின்றி இவ்வளவு தொகையில் உண்ணாவிரதமிருந்து தமிழ் காக்க புறப்பட்ட காளைகளே உங்கள் உண்ணாவிரதம் வீண்போகாது. நிச்சயம் பயன் கிடைத்தே தீரும். நீங்கள் கடைப்பிடிக்கும் ஆயுதத்திற்கு முன்னால் அணுகுண்டுகூட நிற்கமுடியாது.

தமிழர்க்கு எதிராக ஆக்கப்பட்ட இந்த அரசியல் சாசனம் உண்மையில் தமிழர் ஆதரவுடன் நிறைவேற்றப்படவில்லை. இன்றும் தமிழர்களது எதிர்ப்புக்கிடையிலேதான் இந்த அரசியல் சாசனம் இயங்கிக்கொண்டு இருக்கிறது. இந்த அரசியல் சாசனம் கிழித்தெறியப்படும்வரை எங்கள்போராட்டம் ஓயாது இது உறுதி.

இளைஞர் பேரவைசார்பில் செல்வன் இ. தவராசா [illegible] மை சயில், தமிழ் மாணவர்க்கும், தமிழர்க்கும் இழைக்கப்படும் அநீதியை எடுத்துக் கூறினர். இளைஞர் பேரவை எந்த ஒரு கட்சிக்கும் கட்டுப்பட்டதல்ல. அதில் தன் மானமுள்ளவன், தமிழ் பற்று உள்ளவன் எவனுக்கும் இடம் உண்டு. ஆனால் இன்றைய சூழலில் தமிழர் கூட்டணியினர் ஓர் இயக்கம் என்பதாலும் அவர்கள் உண்மையிலேயே தமிழுக்கு பாடுபட்டு வருவதாலும் அவர்களின் ஆதரவை கோரியும்; ஆதரவை வழங்கியும் வருகிறது. எமது இயக்கத்தில் சேரும் அனைவருமே தலைவர்கள்தான் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் நடைபெற்ற கருத்தரங்கில் திரு. பொன் கலன்ட், நெடுங்கேணி வே. செந்தில்நாதன் முல்லைத்தீவு, சி. தேய்வேந்திரம் குமுழமுனை, செல்வன் கந்தசாமி, அரசரெத்தினம் பெ ல [illegible] கரிக்கட்டு மூலை நடக்கு கிராமசபை தலைவர் யோசப் மார்க்குப்பிள்ளை உட்படப் பலர் பேசினர்.

மறுநாள் 22-10-73 மாலை ஆறுமணியளவில் முல்லைத்தீவின் பிரபல வர்த்தகரும், புங்குடுதீவை சேர்ந்தவருமான தமிழ் அன்பன் பொ. நாகேசு அவர்களால் பழரசம் கொடுக்கப்பட்டு உண்ணாவிரதத்தை அவர் முடி

### முல்லைத்தீவு உண்ணாவிரதத்தில் செல்லத்தம்பு முழக்கம்!

த்துவைத்தார். அத்துடன் முல்லைத்தீவு பட்டினசபை தலைவர் திரு. எம். எஸ். பஸ்தியாம்பிள்ளை உண்ணாவிரதமிருந்தோர் அனைவருக்கும் உண்ணாவிரதமுடிவில் உணவும் கொடுத்து உதவினார்கள்.

ஈற்றில் இளைஞர் பேரவையின் சார்பில் செல்வன் வே. செந்தில்நாதன் நன்றியுரை வழங்கினார். இந்த உண்ணா[illegible]விரதத்தில் 72 இளைஞர் பங்குபற்றினர்.

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது


3ம் திகதி முதல்

செல்லமகால்

எம். ஜி. ஆர்.
சரோஜாதேவி
நம்பியார்

— நடித்த —

அரச கட்டளை

கொழும்பில்
3வது மாதம்

கெயிட்டி

கே. பாலசந்தரின்

அரங்கேற்றம்

விரைவில் சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில்

மக்கள் கலைஞர் ஜெய்சங்கர்

நாகேஷ்
வி. கே. ராமசாமி
வி. எஸ். ராகவன்
லட்சுமி
ரமாபிரபா
காந்திமதி — பார்வதி

—நடித்த—

நவாப் நாற்காலி

தேங்காய் சீனிவாசன்
சோ
எம் ஆர். ஆர். வாசு
பாரதி
எம். என். ராஜம்
ஸ்ரீ வித்தியா
வி. ஆர். திலகம்

— நடித்த—

உனக்கும் எனக்கும்

இப்பொழுது காட்சியளிக்கின்றது

சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்நகர்) ஈரோஸ் (பாமன்கடை)

தினசரி 2—6—9.30 ஞாயிறு காலை 10மணி 10.30—2.30—6.00—9.30 மணி 2—6—9.30 ஞாயிறு காலை 10மணி

இதயத்தை உருக்கும் தாயின் அன்பு! அழகும், வலிமையும் அன்புக்கு நிகரில்லை!

தாய், தந்தை, சகோதரர்கள் மெச்சத்தகுந்த ஓர் சித்திரம்!

சிரிப்பும், அழுகையும் சரிவர நிறைந்த எல்லோரும் பார்க்கவிரும்பும் உன்னத நடிப்பு!

ஜெயா, முத்துராமன், சாவித்திரி, சகுந்தலா, சோ, மனோரமா நடித்த—

பெத்த மனம் பித்து



2வது வெற்றி வாரம்

கிங்ஸ்லி பிளாசா வெலிங்டன்
(கொழும்பு) (வெள்ளவத்தை) (யாழ்நகர்)

ஜெமினி, ஜெயந்தி, நாகேஷ்,
முத்துராமன், M. R. R. வாசு,
சுந்தரராஜன் A. சகுந்தலா

— நடித்த—

கே. பாலசந்தரின்

புன்னகை

இது ஒரு வழக்கமான கதையல்ல
வாழ்க்கையில் அடிபட்டு எடுத்து வைக்கும்
நால்வரின் குறைநிசயங்களை
விமர்சிக்கும் ஒரு கட்டுரை...

முதன் முதலாக
ஒரு திரைப்படமாக வருகின்றது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1973ம் வருடம் நவம்பர் மாதம் 4-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.